விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 12 புதன்கிழமை (26.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## சமாதான நடவடிக்கைகளுக்கு கே.பியின் பங்களிப்பு அளப்பரியது

### பேராசிரியர் ரொஹான் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் வழங்கி வரும் பங்களிப்பு அளப்பரியது என சிங்கப்பூர் பல்கலைக்கழக பேராசிரியர் ரொஹான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

இன ஒற்றுமையை ஏற்படுத்துவதில் குமரன் பத்மநாதனின் பங்களிப்பு முக்கியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குமரன் பத்மநாதன் தற்போது இலங்கைப் புலனாய்வுப் பிரிவினரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழர்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான உறவுப் பாலத்தை வலுப்படுத்த குமரன் பத்மநாதன் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குக் கிழக்குத் தமிழர்கள் உள்ளிட்ட பல்வேறு மக்களைக் குமரன் பத்மநாதன் சந்தித்து வருகின்றார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரம் மோதி விபத்து மோ.சைக்கிளில் சென்றவர் பலி

### மற்றொருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் விளாத்தியடியில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளிலும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவத்தில் வியாபாரியான சோனக தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனிஸ் (வயது-42) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

அதேயிடத்தைச் சேர்ந்த மொஹமட் மாஜித் (வயது-17) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வியாபார நோக்கத்துடன் உரும்பிராய் நோக்கிச் சென்ற இவர்கள் உழவு இயந்திரம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது, இவ் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.


இவ் விபத்தின்போது மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற அனிஸ், உழவு இயந்திர சில்லினுள் (18 ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர் குழு அமைப்பதில் ஐ.நா. செயலர் விடாப்பிடி!

### அழுத்தங்களால் தடைப்படாது எனத் தெரிவிப்பு

(நியூயோர்க்)

**இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான நிபுணர்கள் குழுவை அமைப்பது தடைப்படாது என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். இலங்கை அரசு அழுத்தங்களினைக் கொடுத்தாலும் தனது நடவடிக்கை தடைப்படாது எனவும் அவர் கூறியுள்ளார்.** (18 ஆம் பக்கம் பார்க்க)



## பொன்சேகாவை விடுவிக்கக் கோரி 50 எம்.பிக்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

இராணுவக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50பேர் கையொப்பமிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 50 நாடாளுமன்ற உறுப்பினர்களே மகஜரில் கையொப்பமிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த மகஜரில் கையொப்பமிட்டுள்ளார். மனிதாபிமானமற்ற முறையில் ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புனித வெசாக் வாரத்தை அனுஷ்டிக்கும் இந்தத் தருணத்தில் குரோதங்களை அனைவரும் களைந்தெறிய வேண்டியது அவசியம். யுத்த வெற்றிக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் சரத் பொன்சேகா உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அவரை அரசு பழிவாங்கியதுபோதும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## சமூகப் பிளவுகளைத் தடுப்பதற்கு அரசு முனைப்புக் காட்ட வேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்தல்

(வாஷிங்டன்)

இலங்கையில் சமூகங்களுக்கிடையில் நிலவி வரும் பிளவுகளை களைவதற்கு அரசாங்கம் கூடுதல் முனைப்புக் காட்ட வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தல்களின் மூலம் மக்கள் வழங்கிய ஆணையை இந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்து ஓராண்டு கழிந்துள்ள நிலையிலும் எதிர்பார்த்தளவு மாற்றம் இலங்கையில் ஏற்படவில்லை என சர்வதேச சமூகம் சுட்டிக்காட்டி வருகின்றது.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது மக்கள் வழங்கிய ஆதரவினை சமூகங்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகளைக் களைவதற்கு சரியான முறையில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-5)

## ஏ-9 வீதியில் பஸ் குடைசாய்ந்ததில் ஒருவர் பலி; ஏழு பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை பஸ் குடைசாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் குழந்தை ஒன்று மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தவர்களே இவ் விபத்துச் சம்பவத்தில் சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த, காயமடைந்தவர்களின் பெயர் விபரங்கள் வவுனியா வைத்தியசாலையிலிருந்து பெறமுடியவில்லை. (எ-5)







வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள் கேகாலை, நுவரெலியா பாடசாலைகளுக்கு விஜயம் செய்தனர். இதில் கேகாலை மாவட்ட தெஹியோவிட்ட வலய மீகெஸ்த்தன சிங்கள வித்தியாலய அதிபருடன் அதிபர்கள் உரையாடுவதையும் நுவரேலியா வலய வெறிகிளேயர் தமிழ் வித்தியாலய மாணவர்களின் உடற்பயிற்சிச் செயற்பாட்டையும், ஹட்டன் வலய ஹைலன்ஸ் கல்லூரி ஆரம்பப்பிரிவு வகுப்பு ஒன்றின் செயற்பாடுகளையும் அதிபர்கள் அவதானிப்பதையும் படங்களில் காணலாம்.

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு அதிபர் ந.நாகராஜா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இ தில் புதிய அங்கத்தவர்கள் தெரிவும் பாடசாலையின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ச)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு நவீன மாடிக்கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வளாகத்தில் 200 கோடி ரூபாய் செலவில் 4 மாடிகளைக் கொண்ட நவீன வைத்திய வசதிகள் கொண்ட கட்டிடம் ஒன்றை அமைக்க ஜப்பான் சர்வ தேச ஒத்துழைப்பு நிறுவனம் முன்வந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நவீன ஆய்வு கூடம், நவீன அறுவைச் சிகிச்சைப்பிரிவு, தீவிர சிகிச்சைப்பிரிவு என்பன இந்த 4 மாடி கட்டிடத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் தற்போது 16,17,18, 23 மற்றும் 26ஆவது விடுதிகள் அமைந்துள்ள இடத்திலேயே இவ் புதிய கட்டிடம் அமைக்கப்படவுள்ளது.

இந்த விடுதிகள் யூன் மாதத்திற்கு முன்னர் அழிக்கப்பட்டு அந்த் இடத்தில் இரண்டு வருடகாலத்திற்குள் புதிய மாடிக்கட்டிடம் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கையடக்கத் தொலைபேசிப் பாவனையில் சனத்தொகை ரீதியில் இலங்கை முதலிடம்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசி பாவனையில் இலங்கை தென்கிழக்காசிய வலயத்தில் முன்னணியில் உள்ளதாக ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. இந்திய இணையத்தளம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இலங்கையின் சனத்தொகையில் 81.35 சத வீதமானோர் கையடக்கத் தொலைபேசியினை உபயோகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு கோடி 60 இலட்சத்து 27 ஆயிரம் பேர் கையடக்க தொலைபேசியினை பாவனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

தெற்காசிய நாடான பாகிஸ்தானில் 9 கோடியே 7 இலட்சத்து 58ஆயிரம் பேர் கையடக்க தொலைபேசியினைப் பயன்படுத்துகின்றனர்.

இது பாகிஸ்தானின் சனத்தொகையில் 59.6 சத வீதம் என தெரிவிக்கப்பட்டுள்ள இதேவேளை 58 கோடி 4 இலட்சம் கையடக்க தொலைபேசி பாவனையாளர்களைக் கொண்ட இந்தியாவில் சனத்தொகையில் 50 சத வீதமானவர்களே பாவனையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூட்டானில் 47.8 வீதமானவர்களும், மாலைதீவில் 46 சதவீதமானவர்களும், ஆப்கானிஸ்தானில் 35 சதவீதமானவர்களும் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர்.

இதனிடையே பங்களாதேஷில் 34 சதவீதமானவர்கள் கையடக்க தொலைபேசியினை பயன்படுத்தும் அதேவேளை நேபாளத்தில் மிகக் குறைந்தளவான 23 சத வீதமானவர்களே பயன்படுத்துவதாக இந்திய இணையதள ஆய்வு ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கையடக்க தொலைபேசியின் பாவனை அதிகரித்துச் செல்லுவது தொலைத் தொடர்பு ரீதியான சமூக அபிவிருத்தியே காரணம் என அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## சமாதானத்துக்கான உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரி நடத்தும் சமாதானத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியும் ஆரம்ப நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 7.15 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இப் போட்டியில் வடமாகாணத்திலுள்ள 8 பாடசாலைகளும் ஏனைய மாவட்டங்களில் இருந்து 8 பாடசாலைகளுமாக 16 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

போட்டிகள் காலை 8.15 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, பாசையூர் சென் அன்ரனிஸ் கழக மைதானம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

மேலும் இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இறுதிப் போட்டியும் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ச-4)

## தமிழ்த்தினப் போட்டி பதிவுகள் 29ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

மாகாண நிலை தமிழ் மொழித்தினப் போட்டியின் ஆற்றுகைப் போட்டிகளுக்கான பதிவுகள் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 11 மணி வரை வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலையில் நடைபெறும் என மாகாணக் கல்விப்பணிப்பாளர் இராசையா அறிவித்துள்ளார்.

இதற்கான பதிவுகள் 28,29 ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணப் போட்டி ஸ்ரான்லி அணி கால் இறுதிக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட்டு கழகம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் முதலாவது சுற்றில் 2ஆவது போட்டி ஸ்ரான்லி அணிக்கும், மட்டுவில் வளர்மதி அணிக்கும் நடைபெற இருந்த போதிலும் மட்டுவில் வளர்மதி அணி சமுகம் அளிக்காததால் ஸ்ரான்லி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இவ் வெற்றியின் மூலம் ஸ்ரான்லி அணி காலிறுதிக்கு தகுதி பெற்றது. யாழ்.சென்றல் அணிக்கும் யாழ்.ஜொனியன்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் ஸ்ரான்லி அணி காலிறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

இதேவேளை யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வில் இதுவரை நடைபெற்ற 15 போட்டிகளில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 13 புள்ளிகளையும் யாழ்.பல்கலைக்கழக அணி 10 புள்ளிகளையும் கிராஸ்கொப்பர்ஸ் அணி, ஈகிள்ஸ் அணி, ஓல்ட் கோல்ஸ் மற்றும் யூனியன்ஸ் அணி என்பன தலா 5 புள்ளிகளையும் கே.சீ.சீ.சீ. அணி மானிப்பாய் பரிஸ் அணி, ஸ்ரான்லி அணி ஆகியன தலா 3 புள்ளிகளையும் சென்றலைட்ஸ், பற்றீசியன்ஸ் அணி, நியூ ஸ்ரார்ஸ் அணி, மட்டுவில் வளர்மதி அணிகள் புள்ளிகள் எதுவும் பெறாத நிலையில் உள்ளன. (ச-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாண்புமிகு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா (பா.உ), பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்



சந்திரகுமார் முருகேசு (பா.உ) குழுக்களின் பிரதித்தலைவர்.



சில்வேஸ்த்திரி அலென்ரின் பாராளுமன்ற உறுப்பினர்

மக்கள் தலைவனின் மகத்தான சேவைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். அவரது சேவை மேலும் தொடரவும் அவருடன் இணைந்து அயராது உழைக்கும் ஏனைய அன்பு உள்ளங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இத்துடன் எமது சங்கம் 16.03.2010ஆம் திகதி நேரடியாக கலந்துரையாடியதன் பேரில் எமது சேவை பிரமாண குறிப்பினை பெற ஆவன செய்த கௌரவ முதல்வர், பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர், சுகாதார குழுத் தலைவர், செயலாளர் அவர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

தலைவர், செயலாளர், அமைப்பாளர், ஆலோசகர்கள்,
நிர்வாக சபை உறுப்பினர்கள்,
வடக்குக் கிழக்கு மாகாண அரசாங்க பொது (சிற்) ஊழியர் சங்கம்,
யாழ்.மாவட்டம். (1576)


## காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை கோத்தபாய கொள்வனவு செய்வார்?

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரபல வர்த்தகரான ஹரிஜயவர்த்தன ஊடாக இந்த கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் உள்ள லங்கா ஹொஸ்பிட்டல் (அப்பலோ) நிறுவனத்திற்கு சொந்தமான 49 வீதமான பங்குகளை ஹரிஜெயவர்த்தன கொள்வனவு செய்துள்ளார்.

அதனை அவர் வருங்காலத்தில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வழங்கவுள்ளார். இந்த இணக்கத்தின் அடிப்படையிலேயே ஹரி ஜெயவர்த்தனவுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஹரிஜெயவர்த்தன இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் கிறீஸ் எண்ணெயை கொள்வனவு செய்யும் வர்த் தகர்களில் முதன்மை இடத்தில் உள்ளவர் என்பதும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியை அவருக்கு வழங்க காரணமாக அமைந்தது எனக் கூறப்படுகின்றது. ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)


## விற்பனைக்கு

நீர் இறைக்கும் இயந்திரங்கள் வில்லியஸ் மார்க் 25 மற்றும் 12 றொபின் EY 20 மற்றும் 15 என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:103, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(ICRCக்கு அருகாமை)
T.P.: 021 300 1356
(1575)

# இன்று ஒரு தகவல்

## நிகழ்காலம் நம் கையில்

ஒரு பெரிய மனோதத்துவ நிபுணர் மூவாயிரத்து 250 பேரை சந்தித்து அவர்களிடமெல்லாம் ஒரே கேள்வியைக் கேட்டார்.

'நீங்கள் எதற்காக வாழ்கிறீர்கள்?'

இது தான் அவர் கேட்ட கேள்வி அதில் 92 சதவீதம் பேர் ஒரே மாதிரியான பதிலையே சொல்லியிருந்தார்கள்.

அதாவது, "நாளைக்கு நல்ல படியாக வாழ்வதற்காக நம்பிக்கையோடு இன்றைக்குக் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறோம்." என்றுதான் அவர்கள் எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழ்பவர்களைவிட சந்தோஷமாக வாழப்போகிறோம் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான் அதிகம்.

எதிர்காலத்தில் நிம்மதியாக இருக்கவேண்டும் என்பதற்காக இன்றைக்கு அவஸ்தைப்படுபவர்கள் அதிகம்.

ஆனால் கொஞ்சம் நிதானமாக யோசித்துப்பாருங்கள். 'எதிர்காலம்' என்பது உண்மையிலேயே கிடையாது இது ஏதோ சித்தப்பிரமையில் சொல்வதாக நீங்கள் நினைத்துவிடக்கூடாது.

எதிர்காலம் என்பது ஒரு கற்பனை. அதில் நீங்கள் வாழமுடியாது. அதில் நீங்கள் வாழும் போது அது உங்களுக்கு நிகழ்காலமாகிவிடு கிறது.

இப்ப உதாரணத்துக்கு, அடுத்த வருடம்–இதே மாதம் – இதோ திகதி.

அந்த நாள் நமக்கு எதிர்காலம் அதைக் கற்பனையில் தான் பார்க்க முடியும்.

அடுத்த வருடம் அந்த நாள் வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அன்றைக்கு நாம் வாழப்போகிறோம். நாம் வாழும் அந்த நாள் நமக்கு நிகழ்காலம்.

ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் ஒரு நாள் வெளியில் போய் விட்டு வந்து தீவிர சிந்தனையில் மூழ்கி இருந்தார்.

அவருடைய மனைவி பார்த்தார்.

"என்னங்க... ரொம்ப தீவிரமாக சிந்திக்கிறீர்கள் போலிருக்கிறது. இன்றைக்கு ஏன் இவ்வளவு லேட் என்று கேட்டார்.

"அதுவா... அது நம்முடைய ஏழு தலைமுறைகளுக்கு தேவையான ஏற்பாடுகளெல்லாம் பண்ணிக் கொண்டிருந்தேன். அது தான் லேட். என்னுடைய சிந்தனைக்கும் அது தான் காரணம் என்றார்.

அவருடைய மனைவியோ மிகவும் அறிவாளி.

அதனால "வரப்போகும் தலைமுறைகளைப்பற்றி இவர் இப்போ கவலைப்படுவது அறியாமை" என்று அந்த அம்மாவுக்கு தோன்றியது. கொஞ்சநேரம் கழித்து அவர் கணவரிடம் சென்றார்.

"இதோ பாருங்க! நம்ம வீட்டுக்கு வெளியே குடிசையில் ஒரு சந்நியாசி இருப்பார். நீங்கள் அவரிடம் சென்று இந்தச் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு வாருங்களேன்" என்றார்.

அவரோ வேண்டா வெறுப்புடன் கிளம்பினார்.

"சரி! கொடு போய்விட்டு வருகிறேன். என்று சொல்லிவிட்டு சாப்பாட்டை வாங்கிக் கொண்டு புறப்பட்டார்.

அந்த சந்தியாசியிடம் போய் சாப்பாட்டைக் கொடுத்தார்.

அதற்கு அவர், "நான் ஏற்கனவே என்னுடைய சாப்பாட்டை சாப்பிட்டு முடித்துவிட்டேன்" என்றார்.

"அப்படியானால் இதை இரவுச் சாப்பாட்டுக்கு வைத்திருங்கள்" என்றார் செல்வந்தர். சந்நியாசி மறுபடியும் நிமிர்ந்து பார்த்தார். புன்முறுவலோடு சொன்னார்.

"இரவுச்சாப்பாட்டைப்பற்றி நான் இப்பவே எதற்காக கவலைப்பட வேண்டும்?" என்றார்.

சந்நியாசியின் இந்தச் செயல் பணக்காரரின் சிந்தனையில் ஒரு புதுத்திருப்பத்தை உண்டு பண்ணியது.

யோசித்துப்பார்த்தார்.

"இரவுச்சாப்பாட்டைப்பற்றிக் கூட கவலைப்படாத இந்த சந்நியாசி எவ்வளவு விசித்திரமானவர் நானோ ஏழு தலைமுறைக்காக இப்பவே ஏற்பாடு பண்ணிக் கொண்டிருக்கிறேன். இவரோ அடுத்த வேளையைப் பற்றிக் கூட கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமலிருக்கிறாரே!"

செல்வந்தரின் முகத்தில் சிரிப்பு வந்தது. இதிலிருந்து நாம் அறிய வேண்டியது என்னவெனில் நிகழ்காலம் என்பதுதான் நம்மிடம் இருக்கிறது. அதில் நல்லபடியாக வாழ்வதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக எதிர்காலத்தைப் பற்றிய பொறுப்பு நமக்குத் தேவையில்லை என்று முடிவு கட்டக் கூடாது. அதுவேறு, இதுவேறு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### தேசிய கல்வி நிறுவகத்தினால்

## மொழி விருத்திக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தினால் மொழி விருத்திக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கு அரச மற்றும் அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர்கள், ஆசிரியர்கள்விண்ணப்பிக்க முடியும் எனவும் கற்கை நெறிகள் வார இறுதி மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் நடத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கற்கைநெறிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் போதிக்கப்படவுள்ளதுடன் கற்க விரும்புபவர்கள்இதில் ஏதாவது மொழியை தெரிவுசெய்யலாம் எனவும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பங்களைபணிப்பாளர், ஆசிரியர் வலுவூட்டல் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும் எனவும் விண்ப்பித்தல் தொடர்பான விபரங்களையும் மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் வலயக் கல்வி அலுவலகங்களில் பார்வையிடமுடியும் என தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (2-4)

## ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தினால் ஸ்ரீ அம்மா பகவான் சீடர் ஸ்ரீ நரேந்திரன் தாதாஜியின் வாழ்க்கையின் அனுபவம் ஐக்கிய நிலை பற்றிய ஆன்மீக உரை இறுவட்டு மூலம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரார்த்தனை மையத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து முத்தித் தீட்சை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதால் அடியார்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு மையத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (2-4)

## தேர்த்திருவிழா

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறுகின்றது.

நீண்டகாலமாக அலங்காரத் திருவிழா நடைபெற்ற இவ்வாலயத்தில் கடந்த மூன்று வருடங்களாக மஹோற்சவம் நடைபெற்று இவ்வாண்டு புதிதாகச் சித்திரத் தேரமைத்து திருவிழா இன்று நடைபெறுகின்றது. (2-110)

## இராசி பலன்

*26.05.2010*
*(வைகாசி 12, புதன்கிழமை)*
*திரியோதசி காலை 6.52 மணிவரை*
*சுவாதி பிற்பகல் 12.46 மணிவரை*
*இராகுகாலம் 11.52 -1.22 மணிவரை*
*சுபநேரம் 4.22 - 5.52 மணிவரை*
*வைகாசி விசாகம்.*

| | |
|---|---|
| மேடம் | களஸ்திர நன்மை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், நல்ல செய்தி. |
| இடபம் | செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், சத்துரு ஜெயம். |
| மிதுனம் | குடும்பக் கவலை, பணக்குறைவு, காரியஇடையூறு, வேலைச்சுமை. |
| கடகம் | மனச்சஞ்சலம், புதியதகவல், தொழிலில் ஆர்வம், பெரியோர் உதவி. |
| சிங்கம் | கூட்டு முயற்சி, உறவினர் வருகை, விருந்துபசாரம், தனவருவாய். |
| கன்னி | விவாதம், காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, போசனசுகக் குறைவு. |
| துலாம் | தெளிந்த சிந்தை, புதிய முயற்சி, விருந்துபசாரம், நல்ல செய்தி. |
| விருச்சிகம் | அமைதிக் குறைவு, சுப நிகழ்வு, வேலைச்சுமை, பணவிரயம். |
| தனுசு | உடல் நலம், முயற்சி கைகூடும், பெருமையடைதல், பொருள் சேர்க்கை. |
| மகரம் | கடின முயற்சி, இனிய தகவல், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | அஜீரணக் கோளாறு, பிரயாணம், கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| மீனம் | மனஸ்தாபம், காரியதாமதம், பணக் குறைவு, உடல் நலக்குறைவு. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 85 |
| தக்காளி | 100 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 45 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 140 | 140 | 145 |
| பூசனி | 40 | 50 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 45 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 90 | 110 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 65 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 50 |
| பயற்றங்காய் | 180 | 200 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 130 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 230 |
| போஞ்சி | 120 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 35 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 140 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின் மலையகக் கல்வித் தரிசனம் 06




ஸ்ரீராகுல வித்தியாலயத்தின் வரவேற்பும் பாடசாலை நிர்வாக ஒழுங்கமைப்பும் எங்கள் மனங்களை கொள்ளை கொண்ட அதே நேரம், மலையகத் தமிழ் சகோதரர்களின் "பாடுகளின் காட்சி" எங்கள் நெஞ்சங்களை உருக் வைத்தன.

முன்னதாக நுவரெலியா கல்வி வலயத்தில் நின்ற போது காலைப் பொழுதில் மலையகத் தமிழ்ப் பெண்கள் கொழுந்தெடுப்பதற்காக கூடைகளுடன் மலையேறுகின்றனர்.

நெற்றியில் அழுத்தமான குங்குமப் பொட்டு,மூக்குத்தி தமிழ்ப் பெண் என்பதை அடையாளப்படுத்தும் அந்த அம்சங்களுடன் வறுமையின் தணியாத சோகமும் அடையாளமாகிக் கொள்ள,

எங்கள் தமிழினத்தின் பரிதாப ரேகைகள் எங்கள் உடல்களில் ஊன்றித் தைத்துக் கொண்டன.

சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தின் துவம்சம், 1948 இல் நடந்த சுதந்திரக் கொடுப்பனவின் ஓர வஞ்சகம் என்பன கூட்டாக இணைந்து கொள்ள இந்த நாட்டின் பெருந்தோட்ட வருமானத்திற்குப் பங்காற்றும் மலையகத் தமிழ் மக்களை நாடற்றவர்களாகவும் வீடற்றவர்களாகவும் ஆக்கிப் போட்டது.

அவர்களின் "லயன்" வீடமைப்பிற்கு இப்போது பிரியாவிடை வழங்குவதான தகவலும் உண்டு. தனித் தனியான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதில் ஆர்வம் காட்டப்படுகிறது.

இருந்தும் அதன் வேகமும் முழுமையும் போதுமானதல்ல,

தேயிலைக் கூடை மட்டும் பிளாஸ்ரிக்கில் மாற்றமுற, மட்டத் தடியுடன் கொழுந்தெடுக்கும் பணி தொடர்கின்றது.

இக் காட்சிகளின் தாக்கம் ஓடுகின்ற பஸ்சின் வேகத்தையும் மீறி எங்கள் எண்ணத் திரையில் வேகமாய் ஓடிக் கொண்டிருந்தன.

இந்த நினைவுகளோடு இரண்டாவது பாடசாலையின் வாசல் வரவேற்பிக்காக காத்திருந்தது.

நுவரெலியா நல்லாயன் பாலிகா மகாவித்தியாலயத்திற்கு(N/Good Shepherd. BMV) சென்றோம்.

பிரபல்யமான இப் பாடசாலையில் சுமார் ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

அருட்சகோதரி மேரி அதிபராகக் கடமையாற்றுகின்றார். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கற்பித்தல் இடம்பெறுவதைக் கண்ட போது மனம் பேருவகையுற்றது.

ஸ்ரீ ராகுல வித்தியாலயம் போலவே இங்கும் வரவேற்பு. மாணவிகள் கண்டி நடனம் ஆடிய வண்ணம் முன்செல்ல பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்து அதிபர்களை அழைத்துச் சென்றனர்.

அருட்சகோதரியை அதிபராகக் கொண்ட அந்தப் பாடசாலை எந்தவித சலசலப்புமின்றி அமைதியாகப் பணி செய்கின்றது.

எங்கும் பசுமையும் பூக்களின் கண்கொள்ளாக் காட்சியும். 'மீண்டும் பிறப்புண்டேல் நுவரெலியாவில் பிறக்கும் புண்ணியம் செய்தருள வேண்டும்' என மனம் இறைவனை நோக்கி இரங்கிக் கொண்டது.

அந்தளவுக்கு பசுமையும் தண்மையும்.

ஓ... என்னே அற்புதம். திடீர் திடீரென மழை. அந்த மழையின் நனைவில் கதிரவனின் ஒளியில் மலையும், மண்ணும் போட்டி போட்டுப் பசுமையைக் கொட்டிக் குவிக்கின்றன.

இவற்றைக் கண்டபோது எங்கள் வீட்டுக் குரோட்டனும் இப் போது ஒரு 'பூ' தாவரமாக விற்பனை செய்யப்படும் றோசாவும் அதன் அடுத்த பூவுக்காகக் கந்தசஷ்டி விரதம் பிடிக்க வேண்டிய பரிதாபமும் எங்கள் வறட்சியின் கொடூரமாயிற்று.

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று பாடிய ஔவையார் கூட, யாழ்ப்பாணத்துக்கும் நுவரெலியாவுக்கும் விஜயம் செய்த பின்னர்தான் அப்படிப் பாடினாரோ என்று சந்தேகம் எழுமளவுக்கு ஆறுகளின் கொடை உணரப்பட்டது.

மாணவர்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து வகுப்பறைகளைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பாடசாலைச் சீருடை, கூடவே நுவரெலிய கலாசாரமான மேலங்கி இவை அழகிற்கு அழகு சேர்ப்பதுபோல இருக்க, ஊருக்கே குளிரூட்டி பொருத்தப்பட்ட நுவரெலியாவில் அந்த மாணவர்கள் இம்மியும் களைப்பின்றி செழிப்பும் புன்முறுவலுமாக வகுப்பறைகளில் கற்கும் காட்சி வறட்சியின் புத்திரர்களாகிய எங்களுக்கு மகா அற்புதமாயிற்று.

வகுப்பறையில் மாணவர்களின் முகங்கள் பேசும் ஆளுமைத் திறன், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, அதிபரின் எளிமையான நிர்வாகச் சீர் ஒழுங்கு என எல்லாமும் இணைந்து நல்லாயன் மத்திய மகா வித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்தன.

காலை தொடக்கம் மாலை வரை எந்தக் களைப்புமில்லாத சீதோஷ்சன நிலை மாணவர்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் பிடித்தமாயிற்று.

தூசிகள், துகள்கள் எதற்கு மேயிடமில்லை. அந்தப் பாடசாலையின் நிலப்பரப்பு விசாலமானது. ஐந்தாறு வேலையாள்கள் லீக்ஸ் நடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

வகுப்பறைகள், பாடசாலைச் சுற்றுப்புறம் என எல்லா இடமும் பார்வையிடப்பட்டது.

தேநீர் விருந்துக்கான ஏற்பாடுகளும் அங்கே தயாராக, அதில் கலந்து கொண்டோம்.

அளவான மண்டபம், உயர்தர வகுப்பு மாணவர்கள் சிற்றுண்டிகளைப் பரிமாறினர். ஆசிரியர்கள் எவரின் வழிகாட்டலும் கிடையாது.

மாணவர்கள் தாமாகவே சிற்றுண்டிகளையும் தேநீரையும் பரிமாறிய ஒழுங்கு அனைவரையும் வியக்க வைத்தது.



மாணவர்களின் வரவேற்பு நடனம்

எங்கள் மாணவர்களிடம் அத்தகைய இயங்கு நிலை இல்லை என்ற வருத்தம் அந்தக் குளிர்ந்த தேசத்திலும் எங்களைச் சுடவே செய்தது.

ஏன் இப்படி. எங்கள் இடங்களில் என்றால், ஆசிரியர்கள் கதவுக்குள் மறைந்து நின்று சைகை செய்வதும், அதை எடு, இதைக் கொடு என்று சத்தமிட்டு ரென்சன் அடைவதும் சாதாரண நிகழ்வாக நடந்தேறும்.

நுவரெலியா நல்லாயன் மாணவர்களின் செயற்பாட்டைப் பார்த்தபோது, நாங்கள் எங்கள் மாணவர்கள் மீது கடுமையாகக் கவனம் செலுத்துகின்றோமா? என்ற எண்ணம் சிந்தனையில் கலந்து கொண்டது.

எதனையும் சரியாகச் செய்ய வேண்டும் என்ற நினைப்பால் அத்தகைய தொரு கவன ஈர்ப்பிற்கு நாங்கள் ஆட்படுகின்றோம்.

அதனால் மாணவர்கள் மீது அதீத மேற்பார்வை. அந்த அதீத மேற்பார்வையினூடே குழிவாடிபோல குறைகளையும் குற்றங்களையும் பெருப்பித்துக் கொள்ளும் மனநிலை.

தேவையற்ற விமர்சனங்கள். இவை எங்கள் மாணவர்களின் ஆளுமைத் திறத்திற்குத் தடைக் கல்லாக அமைகின்றதோ! என்ற நினைப்பு ஆய்வுக்குரியதாக வேண்டும்.

இப்போது எங்கள் பாடசாலைகளில் வளர்ந்த மாணவர்களின் செயற்பாடுகளில் குறை காணும் தன்மை கூட, மாணவர்கள் சரியாகச் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எங்களிடம் இல்லாததன் விளைவு என்று கருதுவதற்கும் இடமுண்டு.

எதுவாயினும் மலையகத் தரிசனத்தின் போதான எங்கள் முடிபுகளில் ஒன்று, மாணவர்களின் செயற்பாடுகளில், அவர்கள் அவர்களை ஒழுங்குபடுத்துவதில் அவர்களுக்கான சுதந்திரமும் தனித்துவமும் முழுமையாக வழங்கப்பட வேண்டும்.


அவர்கள் சரியாகச் செய்

**விதுரன்**

வார்கள். அவர்கள் மாணவர்கள். அவர்களின் செயலில் தவறு இருந்தால் கூட அதனை அவர்களின் திருத்தத்திற்கான சந்தர்ப்பமாக மாற்றுவோம்.

இந்த நினைப்புகள் எல்லோர் உள்ளங்களிலும் மௌனமாகப் பேசிக் கொள்ள, நல்லாயன் மத்திய மகா வித்தியாலயத்தில் கூப்பி கரமாய் விடை பெற்றோம்.

வகுப்பறையில் மாணவர்கள்





பழமை மாறா வறுமை

மானிப்பாய் -சுதுமலை

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் -26.05.2010

## பிரதமகுருவின் ஆசிச் செய்தி



உலகெல்லாம் உள்ள அருள்பாலிக்கும் ஸ்ரீ லலிதா மஹாத்திரிபுர சுந்தரியாகிய ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் விகிர்தி வருட வருடாந்த மஹோற்சவ காலத்தில் பெருந் திருவிழாவான தேர் உற்சவம் இன்றைய நன்னாளும் சர்வாபரண பூஷிதயாகவும் சௌந்தர்யலஹரியாகவும் விளங்குகின்ற அன்னை ஜகன் மாதா, ஸ்ரீ மாதா ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காகவும் நம்மைரக்ஷிக்கவும் தேரேறி வருகின்றாள்.

ஸ்ரீ புவனேஸ்வரியின் தேர் உற்சவம் தனிச்சிறப்பு வாய்ந்தது. பழமையைப்புகட்டும் பொங்கல் வழிபாடு, அலங்காரச் சிறப்பு, பூஜை மகிமை என அவளின் பெருமை சிறந்து விளங்கும். அயற்கிராமங்களும் அயலூரவர்களும் நிறைந்து இயற்கை வளம் நிறைந்த வயல் முழுவதும் அடியார்களின் கூட்டம் நிறைந்து அலைமோதும் அம்பாளின் கடைக்கண் பார்வை ஒன்றே போதும் என்ற பரவச நிலை அடியார்களிடையே மேலோங்கிக் காணப்படும்.

இன்றைய நன்னாளில் தேரேறி வரும் அமது அன்னை சகல மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களையும் தருவதோடு. தற்போதைய நாட்டின் அமைதிச்சூழல் நிரந்தரமாக, கௌரவமாக, சுதந்திரமாக வாழ வழிவகுக்க வேண்டும் என அம்பிகையைக் கேட்பதோடு தேர் உற்சவ தர்சன பலன் அனைவருக்கும் கிடைக்க ஆசீர்வதிக்கின்றோம்.

*சுபமஸ்து.*

**கிரியா கலாப முத்தாமணி**
**சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக் குருக்கள்**
**சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி,**
**பிரதமகுரு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,**
**சுதுமலை.**

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி




மிகத் தொன்மை வாய்ந்த சுதுமலைத் திருவூரில் புவனேஸ்வரி அம்மன் குடி கொண்டு பக்தர்களின் துயர் தீர்ப்பதை அறியாதவர்கள் இல்லை. தீராத நோய்களை விரட்டி அடியார்களை காக்கும் அற்புதத் தெய்வம் சுதுமலை அம்மன் என்றால் மிகையாகாது.

பாரம்பரிய நெறிமுறை மாறாத மடை பரவி வழிபாடு செய்யப்படுகின்ற புதுமை மிக்க இயற்கை எழில் சூழ்ந்த அழகான திருக்கோவில் தேர்த்திருவிழாவை தரிசிப்பதற்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடுவர்.

சித்தர்கள், யோகிகள் ,ஆயுர்வேத வைத்தியர்கள், கல்விமான்களால் பெருமை பெற்ற திருவூர் சுதுமலை.இத்திருவூரின் ஆட்சிப் பீடத்தில் இருந்து ஆட்சி செய்யும் அம்பிகையை சரணடைந்தால் அச்சமில்லை.

துயர் துடைக்கும் புவனேஸ்வரி அம்பாளின் திருவிழாப் பொலிவில் நல்லாறுதல் பெறுவோம். அம்பாளின் அடியார்கள் என்றும் சிறக்க பிரார்த்தித்து தேர்த்திருவிழா எம் மண்சிறக்க வழி தரும் நாளாக போற்றி அமைகிறேன்.

**ஆறு.திருமுகன்**
**தலைவர்,**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
**சிவபூமி அறக்கட்டளை.**



## 300 வருடம் பழமை வாய்ந்த ஆலயம்

யாழ்ப்பாண நகரின் வடபால் நான்கு மைல் தூரத்தில் உள்ளது சுதுமலை. இதனை சுதுவையம்பதி, சுதுமலைநகர், சுதுகிரி என்றும் அழைப்பதுண்டு.குளம் சூழ்ந்த வயல்களும் வான் பயிர்களும் செய்பயிர்களும், வேம்பு, அரசு, ஆல், மகிழ், மருது, கடம்பு, போன்றசோலை விருட்சங்களும் இக் கிராமத்தை அழகுபடுத்துகின்றன்.இக்கிராமத்தின் மையத்திலே ஆகம விதிகளுக்கமைய கர்ப் பக்கிரகம்,அர்த்த மண்டபம்,மகா மண்டபம்,தரிசன மண்டபம்,ஸ்தம்ப மண்டபம், இராஜகோபுரம் ஆகியவற்றுடன் புவனேஸ்வரி அம்மை அருள் பாலித்து வருகிறாள்.

இவ்வாலயத்தை சூழ சிவன் கோவில், முருகன் கோவில், வைரவர் கோவில் ஆகியனவும் அமைந்து அழகு செய்கின்றன. பழமை வாய்ந்த இந்த ஆலயம் 1775 ஆம் ஆண்டு மண்ணால் கட்டப்பட்டதாகவும் 1822 ஆம் ஆண்டு கல்லால் கட்டப்பட்டது எனவும் யாழ்ப்பாண கச்சேரிப் பதிவுகள் கூறுகின்றன. இக்காலத்தில் இவ்வாலயம் பர்வதவர்த்தினி அம்மன் கோவில் என்று அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

கண்ணகி அம்மன் மதுரை மாநகரை அழித்து அவ்வேகத்துடன் ஈழம்நோக்கி நவாலி களுவோடை ஊடாக இங்கு வந்து தங்கியதாக கருதப்படுகிறது. இதனால் தங்கு சங்கனை எனவும் அழைக்கப்படுறது.

கண்ணகி வழிபாட்டை போற்றி கண்ண கிக்கு விழா எடுத்து வரும் சமயம் இவ்வூர் அன்பரான கதிர்காமர் வேலாயுதர் என்னும் அடியவர் தனது வயலில் உச்சி வேளையில் உழுது கொண்டு நிற்கும் சமயம் பால் போன்ற நரைத்த நிறமுள்ள மயிர், வெண்ணிற ஆடை அணிந்தவரான முதாட்டி ஒருவர் சோலைகள் நடு மத்தியிலே நிற்பதை அவதானித்தார். உழுது கொண்டு நின்றவர் அம் மூதாட்டியிடம் சென்றார். அம் மூதாட்டி தனக்கு தாகம் அதிகம் எனவும் குடிப்பதற்கு நீர் தேவை எனவும் கூறினாள். சிறிது நேரம் தங்கும் படி கூறிவிட்டு தனது வீட்டுக்குச் சென்று இளநீருடன் வந்து பார்த்த போது மூதாட்டியை காணவில்லை.எங்கும் தேடிக் காணாது மனம் சோர்ந்தார். அன்றிரவே அம்பாள் காட்சி கொடுத்து என்னை இவ் விடத்தில் வைத்து ஆதரிக்கும் படி ஆஞ்சையிட்டு மறைந்தருளினார். அம்பாள் தோற்ற மளித்த இடத்தில் அம்பாளை வழிபட்டு வைகாசி மாதத்தில் பொங்கல்,குளிர்த்தி, "சுளகு மடை" படையல் போன்ற நிவேதணப் பொருட்களை வைத்து தேவி வழிபாடு செய்து வந்தனர்.

**வி.கிரிதரன்**

## நல்லை ஆதீனகுரு முதல்வரின் ஆசிச்செய்தி



சுதுமலை திருவூரில் அமைந்துள்ள வரலாற்றுப் பெருமை மிக்க புவனேஸ்ரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்றாகும்.

இத்திருக்கோவில் தேர்த்திருவிழாக் காட்சியைக் காண பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஒன்று கூடுவர்.

பக்தர்களின் துயர் துடைக்கும் புவனேஸ்வரி அம்பாளின் தேர்த்திருவிழாக் காட்சியை காணவரும் பக்தர்கள் அனைவருக்கும் அருள் கிடைக்க ஆசீர்வதிக்கிறேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்,**
**நல்லை ஆதீனம்.**

## தேரேறி வரும் தேவியைத் தரிசித்து வேரோடு வினை தீர வேண்டி நிற்போம்



உலகிற்கு தாயா கவும் பூமிக்கு ஈஸ்வரியாகவும் விளங்கும் எமது குல தெய்வம் ஸ்ரீபுவனேஸ்வரி அம் பாளுக்கு வெகு சிறப்பாக இன்று தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. எமது கிராமத்தின் நடு நாயகியாக வானுயர்ந்த அழகிய இராஜ கோபுர அமைப்பும் முறைப்படி அமைக்கப் பெற்ற ஆலய அமைப்பும் இயற்கை சூழலும் அம்பாளின் திருவருளாகவே காட்சியளிக்கின் றன.

நடைபெற்று வரும் திருப்பணி வேலைக ளும் அவள் செயலாகவே அமைகின்றன. குறிப்பாக கடந்த ஐந்தாண்டு காலமாக ஒவ் வொரு வருடமும் நன்கு திட்டமிட்ட திருப் பணிகள் நிறைவேறி வருகின்றன.சிறப்பாக 2004 இல் அம்பிகைக்குப் பெரிய சப்பறம் அமைக்கப்பட்டது. 2005 இல் கல்யாண மண்டபம் நிர்மாணிக் கப்பட்டது.2006 இல் திருக்கேணி புனரமைக்கப்பட்டு தீர்த்தக் கேணியாக அழகுபடுத்தப்பட்டது. 2007 இல் விநாயகருக்கு சித்திரத் தேர் இழுக்கப்பட்டது., 2008 இல் பிரத்தியேகமான அன்னதான மண்டபம் புதிதாகக் கட்டப்பட்டது. 2009 இல் நாட்டிலிருந்த போர்ச் சூழல் காரணமாக பாதிக் கப்பட்ட மக்களின் நலன் கருதி அன்னதான நிதி மக்களுக்கென வழங்கப்பட்டது.

அனைவருக்கும் சகல செல்வங்க ளும் சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டு மென இன்று சர்வ அலங்கார ரூபினியாக தேரேறி வரும் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளை வணங்கி வேண்டிக் கொள்கிறேன்.

**கு.கணேசதாசன் (J.P)**
**சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான**
**பரம்பரை அறங்காவலர்,**
**தர்மகத்தா சபைத் தலைவர்.**

## சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அருள்பவனி

வலிகாமம் தென் மேற்கில் சுதுமலை எனும் பதியில் மிக வும் வரலாற்றுப் புகழ் மிக்க அம்பாள் திருத்தலமாக சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் விளங்குகிறது. இவ்வாலய மஹோற்சவத்தில் இரதோற்சவம் மிகவும் சிறப்புடையது. அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞான ஒளியை ஏற்றுவித்த இந்நாளில் மக்கள் துன்பங்கள், துயரங்கள் நீங்கி அனைவரும் அம்பாளின் அருள் பவனியில் அருளாசி பெற்று, இன்புற்று, வளம் பெற்று, ஒற்றுமை யுடன் மனம் நிறைந்து வாழ அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.எ.அன்ரன் யோகநாயகம்**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம்,**
**சண்டிலிப்பாய்.**


தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துவோர்

**சுந்தர்சன்**
பிரதான வீதி,
மானிப்பாய்.

**ஸ்ரீ சுபா பேக்கரி**
சுதுமலை.

**V.S.M.ஸ்ரோர்ஸ்**
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

**PC SYSTEMS**
Total IT Solution Providers
Dialog
- Internet Browsing
- Internet Calls
- Dialog, Mobitel, Hutch, etisalat Sims Sales
- Dialog, Mobitel, Hutch, etisalat Reload
- IDD Cards
- Dialog CDMA Phone
- Dish TV Payment
- Dish Antenna Sales
- Samsung Phone Sales
- Cable TV Network

Samsung Phone 3250/=
PC SYSTEMS, Alady Junction, Manipay. (0217391070,0217391071,0217391072, 0777917790)

மோட்டர் சைக்கிள், துவிச்சக்கரவண்டி,
வாட்டர்பம், ஆட்டோ உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
**ஐங்கரன் மோட்டோர்ஸ்**

அனைத்து ஆடைத் திணிசுகளையும்
எண்ணம் போல் தெரிவு செய்திட
**விநாயகர் பட்டுச்சோலை**
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

**ரஞ்சிதா வைத்தியசாலை**
சகல நோய்களுக்கும் சிகிச்சையும் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ஜெயரட்ணம், மகப்பேற்று நிபுணர்கள், டாக்டர்கள் சிறிதரன், சுரேஸ்குமார்,கண் சத்திரகிசிச்சை நிபுணர் டாக்டர் குகதாசன் மற்றும் பற்சிசிச்சை,இரத்தம்,சலம் பரீசிலனை மற்றும் ஆண், பெண் களுக்கான முக அழகுச்சிகிச்சை (Facial) போன்றவை நடைபெறுகிறது. எமது கிளைஸ்தாபனம் உடுவில் மகளிர் பாடசாலைக்கு முன் பாகவும் இயங்குகிறது.
சுதுமலை மத்தி, மானிப்பாய். தொ.பே. 021 222 6174

அழகுக்கு அழகு சேர்க்கும் அசல் 22
கரட் தங்க நகைகளை நவீன
வடிவமைப்புக்களில் பெற்றுக்கொள்ள
**பிரம்யா நகை மாடம்**
யாழ். வீதி,ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

பிஸ்கட் , பால்மா, சொக்லேட் மற்றும்
சிற்றுண்டி வகைகளை மிக விலை கழிவில்
பெற்றுக்கொள்ள
**பமிலி சுப்பர் ஸ்டோர்**
யாழ். வீதி,
மானிப்பாய்.

# மத்திய ஆபிரிக்காவில் பணியாற்ற இலங்கை இராணுவப்படைப் பிரிவு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் படைப் பிரிவொன்று ஐ.நா படையுடன் இணைந்து பணி புரிவதற்காக மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் சாட் ஆகிய நாடுகளுக்கு விரைவில் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

மூன்று அதிகாரிகள் உட்பட மொத்தம் 61 பேர் இந்தப்படைப்பிரிவில் அங்கம் வகிக்கவுள்ளதாக பாதுகாப்பு தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை இராணுவப் பிரிவொன்று மத்திய ஆபிரிக்காவுக்குச் செல்வது இதுவே முதற் தடவையாகும்.

இலங்கை இராணுவத்தின் தொழிற்சார் தகைமை மற்றும் அதன் திறமை என்பனவற்றுக்கு ஐ.நா வழங்கியுள்ள அங்கீகாரமாகவே இது கருதப்படுவதாக இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2-4)

# இரத்மலானை புனர்வாழ்வு மையத்திலிருந்து சகல மாணவர்களும் விடுவிக்கப்பட்டனர்

(கொழும்பு)

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இயங்கிவந்த புனர்வாழ்வு மையத்தில் தங்கியிருந்த மாணவர்கள் அனைவரும் கடந்த திங்கட்கிழமையன்று விடுவிக்கப்பட்டனர்.

நீதி மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் வன்னியிலிருந்து அழைத்துவரப்பட்ட 273 மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கல்வி வசதிகள் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களை கொழும்பு இந்துக் கல் லூரி புனர்வாழ்வு மையத்தில் தங்க வைத்து விடுதி மற்றும் உணவு வசதிகள் உட் பட சகல வசதிகளுடன் பராமரித்து வந்தது.

இவர்களுள் ஒரு பகுதியினர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்த நிலையில எஞ்சி யிருந்த அனைவரும் கடந்த திங்கட்கிழமையன்று விடுவிக்கப்பட்டு அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களுள் வசதி குறைந்த குடும்பத் தைச் சேர்ந்த மாணவர்களை அவர்களது பெற்றோர்கள் விரும்பும் பட்சத்தில் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்பதற்கான வசதிகளுடன் அவர்களை இலவச மாணவர் விடுதியில் அனுமதித்துப் பராமரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் மாமன்றம் உறுதியளித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதத்தில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய புனர்வாழ்வு மையத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மன்றம் விசேட கல்விப் பயிற்சிகளை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

விடுவிக்கப்பட்ட இம்மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவம் திங்கட்கிழமை மாலை புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தலைமையில் நடைபெற்றது.(2-4)

# தமிழ் மக்களிடையே போராடும் குணத்தை தூண்டுவதாக அரச செயற்பாடுள்ளது

## ஐ.தே.க. கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும்பயங்கரவாதம் தலைத்தூக்கும் வகையில் இலங்கை அரசு செயற்படக்கூடாது என ஜனநாயக தேசிய கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இலங்கை அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது வெறுமனே கட்டடங்களையும் வீதிகளையும் புதுப்பித்து தமிழ் மக்களிடையே மீண்டும் போராடும் குணத்தை தூண்டுவதாகவும் அது சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கு கிழக்கு மக்கள் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடும் அர்ஜுன ரணதுங்க மக்களின் மனதை வென்று அவர்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் எனவும் தாம் சிறுவயதில் ஒற்றுமையாக வாழ்ந்தது போன்று ஒற்றுமையாக வாழவேண்டிய சூழ் நிலையை ஏற்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பென சுட்டிக்காட்டும் அவர், இலங்கை அரசோ வடக்கு, கிழக்கு மக்களை தெற்கு மக்களிலிருந்து பிரிந்து இந்த நாட்டில் மீண்டும் ஒரு பயங்கரவாதத்தை உருவாக்கும் வகை யில் செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தினர்.

ஆகவே இவ்வாறான சந்தர்ப்பத்தில் யுத்த வெற்றிகளைக் கொண்டாடுவதைத் தவிர்த்து வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் வலியுறுத்தினார். (2-4)

# இந்தியாவில் அகதிகளாகவுள்ள மலையகத் தமிழர்களுக்கு இன்னமும் பிரஜா உரிமை வழங்கப்படவிலலை-ஜே.வி.பி

(கொழும்பு)

இந்தியாவில் சரணாகதி அடைந்துள்ள இலங்கை அகதிகளுக்கு இன்னமும் பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை என ஜே.வி.பி. கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு இந்தி யாவில் தங்கியுள்ள 28 ஆயிரத்து 500 இலங்கைத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்ட மூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் எனினும், இதுவரையில் அவர்களுக்கு இலங் கைக்கான பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை என ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக இந்த அகதிகளை மீளவும் நாட்டுக்கு அழைத்து வரும் பணிகள் ஸ்தம்பிதமடைந்ததாகவும் இதனால் குறித்த தமிழர்களை மீளவும் இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட்டு வருவ தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் ஆரம்பமான காலப்பகுதியில் மலையகத்தைச் சேர்ந்த தமிழர்கள் இந்தியாவில் சரணாகதி அடைந்தனர்.

அவ்வாறு சரணாகதி அடைந்தவர்களுக்கே பிரஜா உரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.


(2-4)

# 2009இல் நிகழ்ந்த கொடிய போரில் சிக்கித் தவித்து அணைந்து போன 'வித்தியாலய ஒளி தீபங்கள்'


மானிட வாழ்வின் மகத்துவம் விளங்க, மாண்புடன் பணியாற்றிய எம் உறவுகளே!



திருமதி சுமதி தில்லைநாதன் (ஆசிரியர்)



வீ.தினேஸ் (பாடசாலைப் பணியாளர்)



இ.றமேஸ் (ஆய்வு கூட உதவியாளர்)



திருமதி மனோரஞ்சிதமலர் இராஜகுமார் (ஆசிரியர்)

என்றும் உங்கள் திருமுகங்கள் எங்கள் நினைவை விட்டகலாது.

"ஓடியோடி உழைத்த நீங்கள் உறங்கி விட்டீர்கள்
பாடித்திரிந்த பசுங்கிளிகள் நீங்கள் பறந்து விட்டீர்கள்"

இரவு பகல் பாராது உழைத்த உத்தமர்களே நீங்கள் வளர்த்தவர்கள் உம் பெயரை சொல்வார்.

எம் பள்ளிச் செல்வங்கள் ஏறத்தாழ அறுபது பேரையும் மனம் கசிந்து அஞ்சலிக்கின்றோம். எம் பள்ளி வளாகத்தில் பாடிப் பறந்த பாச மலர்களே! குண்டுச் சிதறல்கள் உங்களையும் காவு கொண்டதுவோ.

இன்னும் இப்போரில் சிக்கி உயிர் துறந்த எம் வித்தியாலய ஆசிரியர்களின் உறவுகள் திருமதி விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மகன், திருமதி ஜெயசிந்தாவின் அன்புத் தாயார், திருமதி சகுந்தலாவின் அன்புத் தந்தையார், திருமதி ரேணுகா அவர்களின் அன்புத் துணைவர், திருமதி கிருபாலினி அவர்களின் அன்பு மகன், திருமதி நந்தினி அவர்களின் தந்தையார், சகோதரன், திருமதி ஜெயசுதா அவர்களின் அன்புத் தாயார், திரு.சிவலிங்கம் அவர்களின் அன்புத் தம்பி, செல்வி மாலினி ஆசிரியரின் அன்புச் சகோதரன், திருமதி ரேகாவின் அன்புத் துணைவர் ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகிறோம்.



மு.செந்தில்குமரன் (முன்னாள் ஆசிரியர்)

கல்விச் சமூகம், கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

(ஸ்ரீ-315)

# பதிவு செய்யப்படாத தெரு விளக்குகளால் வருடாந்தம் ரூபா ஒன்றரை பில்லியன் நட்டம்

## மின்வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு

பதிவு செய்யப்படாத தெரு விளக்குக ளினால் வருடமொன்றுக்கு ஏற்படும் ஒன்றரை பில்லியன் ரூபா நட்டத்தினை இனி மேலும் பொறுப்பேற்க இலங்கை மின்சார சபை தயாரில்லையென மின்சக்தி வலு சக்தி அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். ஜுன் முதலாம் திகதி முதல் இவ்வாறான தெரு விளக்குகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை மின்சார சபையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில்கலந்துகொண்டுகருத்துதெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சருடன் இலங்கை மின்சார சபைத் தலைவர் வித்யா அமரபால நடவடிக்கைகள் பணிப்பாளர் றொஷான் குணவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (2-4)

# முன்னாள் பெண்புலி உறுப்பினர்களுக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்பு

## புனர்வாழ்வு ஆணையாளர் நடவடிக்கை

(கொழும்பு)

முன்னாள் பெண் புலி உறுப்பினர்கள் நூறு பேருக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் இவர்கள் அனைவரும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் என்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

குறிப்பிட்ட நூறு பேரும் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இரத்மலானையிலுள்ள ட்ரைஸ்டார் அபரல்ஸ் நிறுவனத்தில் ஆடை தயாரிப்பு இயந்திர தொழிற் பாட்டாளர்கள் என்ற அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் பெண் புலி உறுப்பினர்களிலில் ஆடை தயாரிப்புத் துறையில் பயிற்சி பெற்ற நூறு பேர் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.(2-4)

# அரசியல் சாசனத்திருத்தங்கள் தொடர்பில் கூட்டணி கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

அரசியல் சாசனத் திருத்திருத்தங்கள் தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்த யோசனைகள் குறித்த வரைவுத் திட்டம் எதிர்வரும் மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்கு முன்னர் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவர்த்தை நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கட்சித் தலைவர்களுடனான பேச்சுவார்த்தை நிறைவடையும் என ஜனாதிபதி செயலக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்திருத்தங்கள் தெடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

குறித்த குழுவினர் பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர். 17ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் காணப்படும் குறைபாடுகளை களையும் வகையிலான யோசனைத்திட்டங்கள் முன்வைக்கப்பட உள்ளது (2-4)

# பிரச்சினைகளுக்கு தீர்வை தருபவர்களாக ஊடகவியலாளர்கள் செயற்படவேண்டும்

## சட்டத்தரணி நிரோஸ் பண்டார தெரிவிப்பு

நாட்டின் அரசியலமைப்பு மற்றும் அரச நிறுவனங்களில் சட்ட திட்டங்கள் என்பனவற்றை முறையாக அறிந்து கொண்டு செய்திகளையும் கட்டுரைகளையும் ஆதாரத்துடன் வெளிப்படுத்தக்கூடிய ஆளுமையுடையவர்களாக ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டும் என்று சட்டத்தரணி நிரோஸ் பண்டார தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக நிறுவனத்தின் ஏற்பாட்டில் மத்திய மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான கண்டி, கண்டியனாட்ஸ் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்புக்கான உரிமை பற்றி இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் சட்டத்தரணி நிரோஸ் பண்டார தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

மக்களின் நடைமுறைப் பிரச்சினை தெரிந்து அவற்றினை ஆதாரங்களுடன் ஊடகங்களில் வெளிப்படுத்தி அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தரக் கூடியவர்களாக ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டும்.

எமது நாட்டில் கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. இந்த யுத்த காலத்தில் பெரும்பாலான ஊடகங்கள் யுத்தம் தொடர்பான பிரச்சினைகளுக்கே முன்னுரிமை வழங்கின.

ஆனால் தற்போது யுத்தம் முடிந்து விட்டது. தற்போது நாட்டு மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவற்றினை ஊடகங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன் இன்று அரசியலமைப்பு மாற்றம், தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் தெளிவு பெற்று அவற்றினை பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

தேர்தல் முறையில் மாத்திரம் மாற்றம் கொண்டு வருவதால் பிரயோசனமில்லை. தேர்தல் சட்ட திட்டங்களிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பிரதிநிதிகள் வாக்களித்த மக்களுக்கு நியாயமான முறையில் சேவை செய்யும் நிலைமை நாட்டில் ஏற்பட வேண்டும்.

ஆகவே ஜனநாயக நாட்டின் மிக முக்கிய பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்கள் தமது தொழில் வாண்மையை விருத்தி செய்து கொள்ளும் வகையில் நாட்டின் சட்ட திட்டங்கள், அரசியலமைப்பு ஸ்தாபன வீதிக் கோவைகள் போன்ற விடயங்களை பூரணமாக வைத்திருப்பதோடு தமது செய்திகளில் இவற்றை வெளிப்படுத்தும் திறனையும் கொண்டிருக்க வேண்டும் என்றார். (2-4)

# 26.05.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1703- ரஷ்ய சார் மன்னர் முதலாம் பீட்டர் புனித பீட்டாஸ்பேர்க் நகரை அமைத்தான்.
- 1860-இத்தாலியின் ஒற்றுமைக்காக கரிபால்டி சிசிலியின் பலேர்மோ நகரில் தாக்குதலை ஆரம்பித்தான்.
- 1883-ரஷ்யாவின் மன்னனாக மூன்றாம் அலெக்சாண்டர் முடி சூடினான்.
- 1940- இரண்டாம் உலகப்போர்: பிரான்சில் டன்கேர்க் என்ற இடத்தில் ஜேர்மனியரிடம் சரணடைந்த ஐக்கிய இராஜ்ஜயத்தின் நோர்ஃபோர்க் பிரிவைச் சேர்ந்த 99 பேரில் 97 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1941-இரண்டாம் உலகப்போர்: ஜெர்மனியின் பிஸ்மார்க் போர்க் கப்பல் வட அட்லாண்டிக்கில் மூழ்கடிக்கப்பட்டதில் 2100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1960-துருக்கியில் இடம் பெற்ற இராணுவப் புரட்சியின் போது செலால் பயார் அதிபர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1965-வியட்நாம் போர்: அமெரிக்கப் போர்க்கப்பல்கள் தெற்கு வியட்நாம் மீது குண்டுகள் வீசித் தாக்குதலைத் தொடுத்தன.
- 1967- அவுஸ்திரேலியாவில் நடந்த வாக்கெடுப்பில் ஆதிவாசிகளை மக்கள் தொகை கணக்கெடுப்பில் அடக்கவும் அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்க மக்கள் அங்கிகாரம் அளித்தனர்.
- 1994-சோவியத் அதிருப்பதியாளர்கள் அலெக்சாண்டர் சொல்ஷெனிட்சின் 20ஆண்டுகளின் பின்னர் ரஷ்யா திரும்பினார்.
- 1997-முல்லைத்தீவு கடலில் கடற்புலிகள் படகில் ஏற்பட்ட வெடி விபத்தில் 8 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர்.
- 2006-ஜாவாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் ஆறாயிரம் பேர் வரை பலியாகினர்.

## பிறப்புக்கள்

- 1907-ராச்சேல் கார்சன், அமெரிக்க உயிரியலானர் ( இ.1964)
- 1923-ஹென்றி கிசின்ஜர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1956-கிசெப்பே டோர்ன்டோரே, இத்தாலிய திரைப்பட இயக்குனர்.
- 1975-மைக்கேல் ஹசி, அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்.
- 1977-மகெல ஜெயவர்த்தன, இலங்கை துடுப்பாட்ட வீரர்.

## இறப்புக்கள்

- 1910-ராபட் கோக், ஜெர்மனிய அறிவியலாளர் (பி.1843)
- 1964-ஜவஹர்லால் நேரு, முதலாவது இந்தியப் பிரதமர் (பி.1889)
- 1597-டொன் யுவான் தர்மபால, இலங்கை கோட்டே மன்னன்.

## சிறப்பு நாள்

பொலீவியா-அன்னையர் நாள்.

நைஜீரியா- சிறுவர் நாள்.

**2006-ஜாவாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் ஆறாயிரம் பேர் வரை பலியாகினர்.**



# மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடி தீர்வு காணவேண்டும்

## ஐக்கிய தேசிய முன்னணி தெரிவிப்பு

நாட்டை அபிவிருத்தி செய்வதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதிலும் அரசாங்கத்துக்கு எந்தத் தடைகளும் இருப்பதாக தெரியவில்லை. காரணம் நிறைவேற்று அதிகாரம், பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் அதிகளவிலான உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகாரங்கள் அரசாங்கத்திடமே உள்ளன என்று ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது, கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலம் கிடைத்தது. எனவே அதனைக் கொண்டு துரித கதியில் நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.



முக்கியமாக மக்கள் எதிர் நோ க்கு கின்ற பிரச் சினைகளுக்கு தீர்வுகள் காணப் பட வேண்டும். இந் நிலையில் நாட்டைதுரித கதியில் அபி விருத்தி செய்வதில் அரசாங்கத்துக்கு தடைகள் ஏதும் இருப்பதாக எங்களுக்கு தெரியவில்லை.

30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் முடிந்துவிட்டது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் அரசாங்கத்துக்கு உள்ளது. நிறைவேற்று அதிகாரமும் அரசாங்கத்திடம் உள்ளது. மாகாண சபைகளின் அதிகாரங்கள் மற்றும் அதிகளவான அதிகாரங்களும் அரசாங்கத்திடமே காணப்படுகின் றன.


இந்நிலையில் நாட்டை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை எந்தத் தடையுமின்றி முன்னெடுக்கலாம். யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் அகதி முகாம்களில் எஞ்சியுள்ளனர் என்றார். (2-4)

# கடந்த 11, 13 ஆம் திகதிகளில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் பகுதி 1,2 இற்கான விடைகள்

பரீட்சை இல - 01

### வினாப்பத்திரம் I

01. 2 02. 1 03. 2 04. 2 05. 2 06. 3
07. 2 08. 2 09. 3 10. 1 11. 2 12. 2
13. 3 14. 2 15. 1 16. 1 17. 1 18. 3
19.3 20. 2 21. 1 22. 2 23. 1 24. 1
25.




26. 2 27. 1 28. 3 29. 3 30. 1

31. 21 புள்ளிகள் 32. 30.00 33. 4 34. 3.30/ 3 மணி 30 நிமிடம்
35. 1 36. சீலன் 37. ரமணனும் சுஜாதாவும்
38. அதிக பயிர் / கூடியபயிர் / ஏனைய பயிர்களை விட அதிகமானது
39. பயிர் A 40. பயிர் B

### வினாப்பத்திரம் II

01. 1) கருமை 2) வேற்றுமை 3) கண்களை
4) காகம் 5) ஒற்றுமையின் வலிமையை
6) அதன் வண்ணம் கறுப்பு என்பது பற்றிய கவலை

02. 1) நிறம்/ அழகு 2) விழி /நயனம்

03. 1) வெள்ளை 2) வேற்றுமை

04. அ) 1) அங்குமிங்கும் 2) சரசர
ஆ) 3) விட்டுக்கொடுத்து
இ) 4) மெல்ல மெல்ல 5) கன்னங்கரிய

05. 1) 2 2) 3 3) 2 4) 3 5) 2
6) 1 7) 2 8) 3 9) 3 10) 1

06. 1) யாழ் 2) உடுக்கை 3) சங்கு 4) கொம்பு

07. 1) A 2) B 3) D 4) G 5) E 6) F

08. 1) தியான நிலை/ தியானம்/புலனடக்கம்
2) கோபம் 3) ஆம்

09. 1) 342 2) 120 3) நூற்று நாற்பத்து இரண்டு
4) 4321 5) 3087

10. i) $25cm^2$ ii) vii/7 iii) 22cm
iv) 120cm v) 3நாட்கள் vi) 10 பொதிகள்

11. i) கப்பி ii) வளியின் iii) மழைமாணி iv) B v) வரை சில்லு

12. i) chalk ii) classroom iii) Airport iv) Balloon

13. i) போத்தல்கள் ii) தலைவர்
iii) தண்டவாளப்பாதை/ புகையிரத பாதை iv) தபால்காரன்

14. 1) மாணிக்க கங்கை அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.
2) எல்லோரும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

15. 1) தேங்காய் 2) பெரிது/ பெரியது 3) மகன்

16. இறந்தகாலம் சங்கர் சார்ந்ததாகவே ஏனைய வசனங்கள் அமைதல் வேண்டும்.

# வெளிநாட்டு முதலீடுகளுக்கான இடையூறுகளை கண்டறிய உப-குழு

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் போது ஏற்படுகின்ற இடையூறுகளைக் கண்டறிவதற்கு அமைச்சரவை உப- குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதியமைச்சரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சரத் அமுனுகம தலைமையிலான ஐவர் கொண்ட உப- குழுவே நியமிக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை உப-குழுவில் பிரதியமைச்சர்களான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, டிலான் பெரேரா, பைசர் முஸ்தபா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் குணரத்ன வீரக்கோன் ஆகியோரே அடங்குகின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களினால் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடிய வகையிலான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலேயே இந்தக் குழு ஆராயவிருக்கின்றது.

வர்த்தக மற்றும் கைத்தொழிலை ஊக்குவிக்கக் கூடிய வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் கொள்கைகளை திருத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலேயே இக்குழு கூடிய கவனம் செலுத்தவிருக்கின்றது. (2-4)

# மலேசிய விசா நடைமுறைகளில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

மலேசிய அரசாங்கத்தினால் கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட விசா சட்டக் கெடுபிடிகளில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை, பாகிஸ்தான், இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான விசா நடைமுறையில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த நாடுகளிலிருந்து செல்லும் பயணிகள் ட்ரான்சிஸ்ட் விசாக்களுக்காக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை என மலேசியா அறிவித்துள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் மலேசியா இந்த விசா தளர்வு நடைமுறையை அறிமுகப்படுத்தவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மலேசியா செல்லும் இலங்கைப் பிரஜைகள் இவ்விசாக்களுக்காக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# போர் காரணமாக இடம்பெயர்ந்த 25 வீதமான மக்கள் தொடர்ந்தும் முகாம்களில் உள்ளனர்

## மீள்குடியேற்ற அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ள போதிலும் போர் காரணமாக இடம்பெயர்ந்த 25 வீதமான மக்கள் தொடர்ந்தும் முகாம்களில் தங்கியுள்ளனர். இவ்வாறு 62 ஆயிரத்து 805 பேர் தொடர்ந்தும் முகாம்களில் இருப்பதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களில் 29 ஆயிரத்து 33 பேருக்கு சுதந்திரமாக சென்று வர வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

எனினும் கடந்த 12 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான அறிக்கையில் 76 ஆயிரத்து 568 பேர் முகாம்களில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களை 100 நாள் வேலைத் திட்டமொன்றின் ஊடாக மீளக்குடியேற்றுவதாக அரசாங்கம் பல முறை சர்வதேச சமுகத்திடம் உறுதியளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (2-4)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையேயான மோதலை அரசாங்கமே தூண்டுகின்றது

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையிலான மோதல்களை அரசாங்கமே தூண்டுவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்துகின்றது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை இலங்கைக்குள் இயங்க வைப்பதற்கான முனைப்புக்களுக்கு தடை ஏற்படக் கூடாது என்ற காரணத்தினால் அரசாங்கம் இவ்வாறு மாணவர் சமூகங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தி வருவதாகவும் தற்போது இடம் பெற்று வரும் மோதல்கள் ஏனைய கிளர்ச்சி களை விடவும் வித்தியாசமானதென அனை த்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் உந்துல் பிரேமரட்ன தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது,

கல்வி ஆண்டின் ஆரம்ப காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்படுவது வழமை என்ற போதிலும் தற்போது அசாதாரண நிலைமைகளில் மோதல்கள் ஏற்படுகின்றன.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் திட்டம் மஹிந்த சிந்தனையில் சொல்லப்பட்ட தொன்றல்ல. தேர்தல் காலத்தில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இலங்கையில் நிறுவப்படும் என அரசாங்கம் அறிவிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் தனியார் பல்கலைக் கழகங்களை உருவாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் வன்முறையில் ஈடுபடுவதனைப் போன்றதொரு தோற்றத்தை உருவாக்குவதில் அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். (2-4)

COLOMBO COMMERCE RESOURCE CENTRE
கொழும்பு வணிகவள நிலையம்

# முன்னோடிப் பரீட்சை க.பொ.த.உயர் தரம்-2010

## தமிழ் -I

நேரம் : 3 மணி

◈ முதலாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலுள்ள எவையேனும் நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

1. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்க.
அ) அவற்றின் பொருளினை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) அடிக்கோடிட்ட பகுதிகளின் சிறப்பை விளக்குக.

(1) கரை பொரு திழிதருங் கான்யாற் றிகுகரை
வேர் கிளர் மாராஅத் தந்தளிர் போல
நடுங்கலானா நெஞ்சமொ டிடும்பை
யாங்கனந் தாங்குவென் மற்றேயோங்குசெலற்
கடும்பகட் டியானை நெடுமானஞ்சி
ஈரநெஞ்ச மோடிச் சேண் விளங்கத்
தேர்வீசி ருக்கை போல
மாரி யிரிஇ மான்றன்றால் மழையே.

(2) உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண் பொத்த லொப்பதாம் ஒப்பு.
பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமையால் திரிந்து.
தலைமி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலைமி னிழிந்தக் கடை.
செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லா ளினூடி விடும்.

(3) கோதறத் தவஞ் செய்து குறிப்பினெய்திய
நாதனைப் பிரிந்தன ணலத்து நீங்கினான்
வேதனைத் திருமகன் மெலிகின்றாள் விடு
தூதெனப் பரதனும் தொழுது தோன்றினான்.

அறந்தனை நினைந்திலை யருளை நீத்தனை
துறந்தனை முறைமையை யென்னுஞ் சொல்லினான்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தன
னிறந்த தன் றாதையை யெதிர்கண் டென்னவே.

(4) அத்தலத் திழிந்தங் கிருந்தன ரிதன்மே
லமரர்கள் கரத்தினா லியற்ற
வெத்தலத் தினிலும் வியனுற விளங்கி
யிலங் கொளிக் கதிர்மதி யிருபா
னித்த நித்தமுஞ் சாய்ந்தோடாமேலவர்
டவமெலா நிறைவுற வுலக
மத்திமத் துதித்த கருபத்துல்லாதன்
வாய்திறந் தழுதது வன்றே.

(24 புள்ளிகள்)

2. "அ" பகுதியில் உள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

"ஆ" பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) நீ யார்?
இனிதான கனியளிக்கும்
இந்நிழல் மரங்கள் ஆங்கு
கனிபிழிந்தன்ன ஓசைக்
கடலலை நல்கும் புட்கள்
பனிதங்கு புல்லினோடு
மாமிசம் உண்ணும் மாக்கள்
நனி எழி லோடு மின்னும்
நாகங்கள் யாவினுள்ளும்
மனிதா நீ யார்? இம்மண்ணில்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஓதிய மறைகள் உன்னை
உயர்ந்தவன் என மொழிந்தே
தோதாகி உலகும் உன்றன்
சுகத்திற்கு வளையு மென்னும்
பாதார விந்தம் சென்னி
பணித்திடும் சிருஷ்டி நல்ல
ஆதாரம் அமரர் உன்றன்
அடிமினைக் கௌரவித்தார்!
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஆந்தையின் அலறலுக்கும்
அர்த்தம் நீ காணுகின்றாய்
சேர்ந்த ஓர் காகம் சுத்த
சிந்தையை இழப்பாய் பூனை
பாய்ந்திடிந் பயந்து போவாய்
பல்லியின் நச் சொலிக்கே
மாற்றிடுவாய் உனக்கே
இவையெல்லாம் உயர்ந்த தாயின்
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

சிங்கத்தின் கர்ச்சனைக்கும்
சிறுத்தையின் உறுமலுக்கும்
தும்பியின் பிளிறலுக்கும்
சீறிடும் பாம்பினுக்கும்
தங்குநீர் முதலைகட்கும்
தாங்குமோ உயிர் என்றீங்கு
வந்தித்து வாழுகின்றாய்
மறைவினால் உயர்வு கண்டாய்
மனிதா நீ யார்? இம்மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

(அ) "மனிதா நீ யார்?" என வினாவும் அண்ணல் கவிதையின் சிறப்பை ஆராய்க?
(ஆ) கவிஞர் மனிதனை உயர்ந்த ஜாதியாக மதிக்க ஏன் தயங்குகின்றார்?
(இ) மனிதனை உயர்ந்த பிராணி எனக் கொள்வது எவ்வளவு பொருத்தமானது?
(ஈ) அண்ணல் கவிதை மூலம், போதிக்கப்படும் அறிவு யாது?

அல்லது

ஆ) எங்கேயோ போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த ராமு தெருவில் மணி எதிரே வருவதைக் கண்டு தயக்கமுற்றான். அப்பொழுது மணியைக் கண்டு பேசுவதா? வேண்டாமா? என்று கூட அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. வீட்டிற்கு வந்திருந்ததாகச் சொல்வதா? வேண்டாமா? மணியின் மனைவி சொன்னதைச் சொல்வதா? வேண்டாமா? இத்தகைய கேள்விகள் அவனது மனதில் எழுந்தன. ஒருவேளை மணியின் மனுமதியின் பேரில் அவள் அப்படிப் பேசியிருந்தால் சரியாய் போய்விடும். இல்லாவிட்டால் தான் சொல்வதால் அந்தப் பெண்ணின் அசட்டுத்தனமோ? அறியாமையோ, மணிக்கு கோபத்தை உண்டாக்கினால்? அவர்களிடையே பெருத்த மனத்தாங்கல் ஏற்பட்டால்? யார் கண்டார்கள்? மனித சுபாவம் எது வேண்டுமானாலும் நினைக்கும். அந்த மாதிரி மனக்கசப்பு நேரிடுவதற்கு தான் காரணமாகக் கூடாது. அவள் தானாக் மணியிடம் முழுவதும் சொல்லியிருக்கிறாள் என்பது என்ன நிச்சயம்? சொல்லியிரா விட்டால் அசட்டுத்தனம் ஆபத்தாக முடியும்.

(அ) இப்பகுதியில் விபரிக்கப்படும் ராமுவின் மனவோட்டத்தை விளக்குக?
(ஆ) இவ் உரைப்பகுதியில் கூறப்படும் மையக்கருத்து என்ன?
(இ) ராமுவின் மனவோட்டத்தின் பின்னணி யாது?
(ஈ) ஆசிரியர் கருத்தை விளங்க வைக்கக் கையாண்ட நுட்ப முறைகளை எடுத்துக் காட்டுக?

### பகுதி II

3. "குடிசெயல்வகை" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.
அ) குடி செய்தல் என்றால் என்னவென்பதும், அதற்குக் காரணமாவதும் துணையாவதும்
ஆ) குடி செய்வார் எய்தும் சிறப்பு
இ) குடி செய்வார் அதனைச் செய்யும் இயல்பும் அவர் இல்லாத குடிக்கு ஏற்படும் கதியும்

4. தசரதன் இறந்த செய்தியைப் பரதன் வாயிலாகக் கேட்டது முதல் இராமன் தந்தைக்கு நீர்க்கடன் செய்யப் புகுந்தது வரையுள்ள பகுதியில்,
அ) தசரதனிடத்து இராமன் கொண்டிருந்த பாசம்
ஆ) தசரதனின் பெருமை
இ) வசிட்டனின் பெருமை ஆகியன வெளிப்படுமாற்றத் துலக்குக.

5. கல்வாரி நோக்கிச் செல்லும் இயேசுபிரானைக் கண்ட எருசலேம் நகரமக்கள் அடைந்த துயரத்தினை இரட்சணிய யாத்திரிக ஆசிரியர் சித்தரிக்குமாற்றிலுள்ள சிறப்புக்களை ஆராய்க.

6. மகாகவி பாரதியாரின் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி" எனத் தொடங்கும் கவிதையிலும் "தொழில்" என்னும் கவிதையிலும் பாரதியாரின்,
அ) தேசப்பற்றுக்கான காரணங்கள்
ஆ) "தொழில்" எனும் கவிதையில் தொழிலாளர், உழவர், கலைஞர், விஞ்ஞானிகள் ஆகியோரை விளித்துப் பாரதி போற்றிப் புகழும் விதம்

7. "தமிழ்ப் பாஷைக்குள்ள குறைகள்" என்னும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு
அ) மொழி பற்றிய மகாகவி பாரதியாரின் கருத்துக்களையும்
ஆ) தமிழ்மொழி வளர்ச்சி குன்றியிருப்பதற்கான காரணங்கள் என்று அவர் குறிப்பிடுவனவற்றையும்
இ) தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய வழிகள் என அவர் காட்டுவனவற்றையும் எடுத்துக் காட்டுக.
ஈ) கருத்தை வலியுறுத்த கையாண்ட முறைமை.

(15 புள்ளிகள்)

8. இலங்கையர்கோனின் வெள்ளிப்பாதசரம் கதையில்,
அ) திருவிழாவுக்குச் செல்லும் நல்லம்மா செல்லையா ஆகிய இருவருக்கும் இடையே நிலவும் அன்னியோன்னியமும் நல்லம்மா மீது செல்லையா கொண்டிருந்த ஆழமான அன்பும் வெளிப்படுத்தப்படும் முறைமையை விளக்குக.
ஆ) இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நியாயப்படுத்தப்படும் முறை கதையில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது.
இ) இக்கதையில் வெளிக்காட்டப்படும் கிராமியப் பண்பாட்டு முறைகள் சிலவற்றைப் பட்டியற்படுத்துக.

9. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
அ) "இளையோர் சூடார்" எனத் தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளில் சாத்தனின் பெருமை சித்தரிக்கப்படுமாறு
ஆ) "தேயிலைத் தோட்டத்திலே" என்ற கவிதையில் தோட்டத் தொழிலாளரின் துயரநிலை புலப்படுத்தப்படும் விதம்
இ) அம்பிகை சந்திரனிடத்து அன்பு பூணுவதற்கும் சினங்கொள்வதற்கும் குமரகுருபரர் கற்பிக்கும் ஆதாரங்கள்
ஈ) "இராமநாடகக் கீர்த்தனையில்" இராவணன் கொலு வீற்றிருந்த கோலம்
உ) நாகம்மாள் என்னும் நாவலில் "நாகம்மாள்" எனும் பாத்திரப் பண்பின் குணாதிசயங்களும் நாவலூடாக உணர்த்தப்படும் படிப்பினைகளும்

---

♦ முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தேர்ந்தெடுத்து மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## தமிழ் -II 3 மணி

### பகுதி - I

(1) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350 - 400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ. பேராசிரியர் க. கைலாசபதியின் தமிழ்ப்பணிகள்

ஆ. இலங்கைத் தமிழ் நாட்டார் பாடல்கள்.

இ. ஊடகங்களும் தமிழ் மொழி வளர்ச்சியும்.

ஈ. உலகமயமாக்கலும் பண்பாட்டுத் தனித்துவமும்.

உ. பல்லினப் பண்பாடு.

ஊ. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

(20 புள்ளிகள்)

(2) பின்வரும் "அ" உரைநடைப்பகுதிகளையும் "ஆ" செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) பழமை இனி ஒரு நாளும் திரும்பி வர முடியாது பழமையைப் பற்றிப் பேசுவது என்பது மரங்களை வெட்டி வீழ்த்தி அவ்விடத்தில் வீடுகள் கட்டுவது போன்றதாகும் என்பதுதான் உண்மை. சிந்தனா சக்தியை இழந்தவர்கள்தான், பழமையப் பற்றிக் கிளிப்பிள் ளைகளைப் போல் பேசுவார்கள். உலகம் விஞ்ஞானத்திலும் பொருளாதாரத்திலும் பிரமிக்கத்தக்க முற்போக்கு அடைந்து வருகின்றது. இந்த முற்போக்கைப் போன்றே வெறுக்கத்தக்க தன்மைகளும் நிலமைகளும் நாளுக்கு நாள் மலிந்து வருகின்றன. எனவே, பழைமையிலுள்ள நல்லவைகளையும் உபயோக முள்ளவைகளையும் வைத்துக் கொண்டு காலத்திற்கேற்ப உலகத்தோடொட்டி வாழ்வதுதான் சிந்தனையாளருக்கு அழகாகும்.

1. இப்பகுதியில் ஆசிரியர் கூறவந்த கருத்து யாது?

2. கருத்துக்களை வலியுறுத்த ஆசிரியர் கையாண்ட நுட்பமுறைகளை விளக்குக?

3. இப்பகுதியில் ஆசிரியர் கூறியவற்றை இருபது சொற்களுக்கு மேற்படாது சுருக்கி எழுதுக.

(3 x 3 = 9 புள்ளிகள்)

(ஆ) இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன் சொலாலென்றும்மகிழாதே- பொன் செய்
கதிர் வளையாய் பொங்காது அழகற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.

1. மேற்கண்ட செய்யுளிலே ஆசிரியர் பொதிந்து வைத்துள்ள கருத்தை ஏறத்தாழ முப்பது சொற்களில் ஒரு பந்தியாக எழுதுக.

2. இச் செய்யுளில் நீர் இனங் காணும் அணிப் பிரயோகங்களை எடுத்துக் காட்டுக

(3 x 2 = 6 புள்ளிகள்)

(3) மேல்வரும் பதினைந்து வினாக்களும் (அ), (ஆ), (இ) என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியில் இருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களையேனும்தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(அ)(1) தற்காலத் தமிழில் வழங்கும் கிரந்த எழுத்துக்கள் நான்கினைத் தந்து அவை சொற்களின் இறுதியில் வரக்கூடிய நான்கு சொற்கள் தருக?

(2) பின்வருஞ் சொற்களில் "உ" கரம் இதழ் குவித்து ஒலிக்கப்படும் சொற்களை எழுத்துக் காட்டுக?
பயறு, கதவு, அழகு, நாடு, வரவு, உப்பு, கண்ணு, கற்பு

(3) பின்வரும் வாக்கியத்தில் உடனிலை மெய்மயக்கம் இடம்பெறும் சொற்களை எடுத்துக்காட்டுக. இங்ஙனம் அடைமழை சொல்லாமல் கொள்ளாமல் வந்தாலும் பட்டி தொட்டிக்குப் போகிறவர்கள் நிற்கவேயில்லை.

(4) நட, படி, ஓடு, வெட்டு, அழு, குடி, சிரி, உண் இவற்றுள் செயப்படு பொருள் குன்றியவினையடிகள் யாவை?

(5) அழ!, அளி ஆகிய சொற்களின் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கயங்களில் அமைத்துக் காட்டுக.

(ஆ) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.
முதல்நாள் இரவு சுகமாகப்படுத்து நித்திரை செய்தவள் இன்று இரவு நரக வேதனை அனுபவித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். முதல் நாள் சிரிப்பும் சந்தோசமுமாக பேசிக்கொண்டிருந்தவர்களிடம் இன்று நாகம்மாவால் உற்சாகமாக நடந்து கொள்ள முடியவில்லை. அடிபட்ட குழந்தை மேலும் கீழும் பார்ப்பதைப் போல மணியகாரர் தம்முடைய கிருதா மீசையைத் தடவிக் கொண்டே ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார்.

(6) வினையாலணையும் பெயர்

(7) இணைமொழிகள்

(8) பெயரெச்சம்

(9) "இரு" என்னும் துணைவினை கொண்டு அமைந்த சொற்கள்.

(10) வினைமுற்றுக்கள்.

(இ) (11) பின்வரும் வாக்கியங்களுள் பொருள் மயக்கம் தரும் வாக்கியத்தைக் குறிப்பிட்டு பொருள் மயக்கம் என்ன எனபதை விளக்குக?
கண்ணன் இராமனுக்குத் தன்னுடைய புத்தகத்தைக் கொடுத்தான்.
கண்ணன் இராமனுக்கு அவனுடைய புத்தகத்தைக் கொடுத்தான்

(12) பின்வருவனவற்றுள் தன்வினைக்குரிய சொற்களை எழுதுக.
போ, எழுப்பு, உருள், பயிற்று

(13) மரத்தின் இலைகள் ஒவ்வொன்றும் வாடின. எனும் வாக்கியத்தை வழுவின்றி எழுதுக.

(14) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
வாணெடுங்கண்ணுடைக் கோற்றொடியார்

(15) தூதுணம் புறவெனத் துதைந்த நின்னெழினலம்.

(20 புள்ளிகள்)

### பகுதி - II

(4) (அ) சங்கமருவியகால இலக்கியங்களின் முக்கிய பண்புகளைத் துலக்குக.
(ஆ) சங்கமருவியகால இலக்கியங்கள் முற்கால இலக்கியங்களில் இருந்து எவ்வெவ் முறைகளில் வேறுபடுகின்றன?

(5)(அ) பல்லவா் மன்னா்காலத்தில் தோன்றிய சமயச் சாா்பற்ற இலக்கியங்களைக் குறிப்பிட்டுப், பக்தி இலக்கியங்களின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக?
(ஆ) சோழப் பெருமன்னர் கால இலக்கியங்களில் பல்லவர்கால இலக்கியங்கள் ஏற்படுத்திய செல்வாக்கினை எடுத்துக் காட்டுக?

(6) (அ) தொடக்ககாலத் தமிழ்ச் சிறுகதையின் முக்கிய பண்புகள் யாவை?
(ஆ) நவீன காலச்சிறுகதைகளின் முக்கிய பண்புகள் யாவை? அப்பண்புகள் புதுமைப்பித்தனின் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளவற்றைத் தெளிவுபடுத்துக?

### பகுதி - III

(7) (அ) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் பற்றி விளக்கி எழுதுக.
(ஆ) இலங்கையில் எழுந்த பள்ளு இலக்கியங்கள் பற்றி விளக்கி எழுதுக.

(8) (அ) 20ம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் கவிதையின் வளர்ச்சிப் போக்கினைத் தெளிவுபடுத்துக?
(ஆ) 20ம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்க் கவிதை வளர்ச்சியின் முக்கிய கட்டகங்கள் யாவை?

(9) மேல்வருவோருள் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
(அ) பேராசிரியர் வி. செல்வநாயகம்
(ஆ) முகம்மது காசிம் சித்திலெப்பை
(இ) மஹாகவி
(ஈ) சி.வி. வேலுப்பிள்ளை

# 50 வீதமான மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களில் ஆண்கள் இல்லை

## த.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் அரசாங்கத்தினால் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களில் 50 வீதமான குடும்பங்களில் ஆண்கள் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பெரும் எண்ணிக்கையிலான ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகதமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக குடும்பத்தின் பொருளாதார சுமையை பொறுப்பேற்பதற்கு ஆண்களின் பங்களிப்பை உரிய முறையில் வழங்க முடியாத நிலை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் தங்களது குடும்பங்களுடன் தங்கி வாழும் ஆண்களில் 30 வீதமானவர்கள் வலது குறைந்தவர்கள் எனவும் யுத்தத்தின் போது ஏற்பட்ட காயங்களினால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் வேலையில்லாப் பிரச்சினை, மாணவர்களுக்கு பாடசாலை, சுகாதார வசதிகளின்மை போன்ற பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருவதாகவும் இடம் பெயர் மக்களில் பலரிடம் உரிய ஆவணங்கள் இல்லை எனவும் இதனால் நலத் திட்டங்களை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பாக காணி உறுதி, பிறப்பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் , அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்கள் இல்லாமல் மக்கள் அல்லலுறுவதாக தெரிவித்துள்ளார்.(2-4)

# அமெரிக்க குடிவரவற்ற விசாவின் விண்ணப்பக் கட்டணம் உயர்வு

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான குடிவரவற்ற விஸா விண்ணப்பங்களுக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

புதிய கட்டணங்கள் தொடர்பில் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்ட அறிக்கையிலேயே இக்கட்டணம் அதிகரிப்பு தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 4 ஆம் திகதி முதல் புதிய கட்டணங்கள் அமுலுக்கு வரும் என அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் வணிக நடவடிக்கைகள், சுற்றுலா, மாணவர்களுக்கான விண்ணப்பங்களுக்கு 140 அமெரிக்க டொலர்களும் (ரூபா 16,100), தற்காலிக பணியாளர்கள், மத விவகாரங்களுக்கான பயணிகள் உள்ளிட்டோருக்கு 150 அமெரிக்க டொலர்களும் (ரூபா 17,300) முதலீட்டாளர்களுக்கு 390 அமெரிக்க டொலர்கள் (ரூபா 44,900) அறவிடப்படவுள்ளன.

கட்டணங்கள் யாவும் வங்கிக் கட்டளைகளினூடாக அனுப்பப்பட வேண்டும் என தூதரகம் தெரிவித்துள்ளது. (2-4)

# போர்க்குற்றங்கள் தொடர்பான கருத்துக்கு ஆதரவு வழங்கும் இலங்கையர் எவராயினும் புறக்கணிக்கப்படவேண்டும்- எஸ்.எல். குணசேகர

இறுதிக் கட்டயுத்தத்தின் போது போர் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டதாக குற்றம் சுமத்தும் சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான குழு அது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என தெரிவித்துள்ளதாகவும், இந்த கருத்துக்கு ஆதரவு வழங்கும் இலங்கையர் எவராயும் இருப்பார்களாயின் அவர்கள் புறக்கணிப்பட வேண்டும் என பிரபல சட்டத் தரணியான எஸ்.எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான குழுவின் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். (2-4)

# வழக்குகளை வாபஸ் பெற்றால் திஸ்ஸநாயகத்திற்கு மன்னிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம், தாம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குகளை வாபஸ் வாங்கும் வரையில் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படாது என வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் அவர் தரப்பு சட்டத்தரணிகளினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சட்டமா அதிபருக்கு பொது மன்னிப்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அரசாங்கம் பணித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (ச-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## புங்கு

Botanical Name-Pongamia Pinnata
Family-Leguminosae
Engl- Indian beech
Sinh- Mugulkaranda

சுமாரான உயரமுடைய உரோமங்கள் அற்ற மரம். சிறிய தண்டோடு, பரவும் கிளைகள் கொண்டு, 18 மீற்றர் உயரம், 1.5 மீற்றர் விட்டமுடையது.ஒரு சிற்றிலையில் முடியும் சிறகு கூட்டிலை, சிற்றிலைகள் 5-7, நீள் உருளை-முட்டை வடிவான, 5-17.8 செ.மீ. நீளம் மலர்கள் ரெசிம்களில் மணம் கொண்டு வெளிர் ஊதா-வெள்ளை, இளஞ்சிவப்பு நிறம் கொண்ட நீண்ட மஞ்சரிக்காம்பு. கனிகள் தட்டையாக, கட்டை தன்மை கொண்டு, உரோமங்களற்று, வெடியாமல், நீள் உருளை வடிவம் அல்லது முட்டை வடிவமானவை. 4.0-7.5 செ.மீ நீளம் , 1.7-3.2 விட்டம் உடையவை. விதை -1, முட்டை வடிவம் உடையவை. சுருங்கியவை 1.7-2.0 செ.மீ நீளம் 1.2-1.8 செ.மீ விட்டம், சிவந்த பழுப்பு நிறமுடைய விதையுறை கொண்டது. மலர்கள், கனிகள் வைகாசி, ஆனி மாதங்களில் காணலாம்.

### பரம்பலும், இனவிருத்தியும்

விதைகள் மூலம் இனவிருத்தியடையும். இதனை பொதுவாக வெப்பத்தை தனித்து குளிர்ச்சியை தருவதற்கான சாலையோரங்கள், பூங்கா தோட்டம், வயல் வெளிதோப்புகளில் வைத்து வளர்க்கலாம்.

### மருத்துவப்பயன்கள்

- இதன் இலையை பூச்சிகள் அரிக் காதவைகளாகவும், சுத்தமானதாகவும் எடுத்தரைத்து சொறி, சிரங்குகளுக்கும் சீழ் வடியும் புண்களுக்கும், கொப்பளம் ஆகியவைகளுக்கு வைத்துக் கட்டலாம்.
- குழந்தைகட்கு ஏற்படும் மாந்த, கணங்களுக்கு புங்கன் இலையை பற்படாகம் சேர்த்து குடிநீர் காய்ச்சி குடிப்பது கிராம வழக்கும். இதில் ஒரு முறையானது புங்கு, புளி, மா, வேம்பு, கறிவேப்பிலை இலைகளின் இலைகள் ஒவ்வொன்றும் 10கிராம் வீதம் எடுத்து 500 மில்லி நீர்விட்டு இத்துடன் வேர்க்கொம்பு, சீரகம் இலையும், ஒவ்வொன்றும் 5 கிராம் வீதம் போட்டு குடிநீர் காய்ச்சி $1/4$ பங்காக வற்றவைத்து 30 மில்லி அளவை காலை, மாலை கொடுக்க மேற்படி நிலைமைகளில் ஏற்படும் காய்ச்சல் தணியும்.
- கரப்பான் எனும் படையுடன் கூடிய நீர்வாயும் புண்களுக்கு புங்கம் பூ, புளியம் பூ, வெள்ளைப்பூண்டு, சீரகம், நன்னாரி வேர், வெட்பாலையரிசி, வசம்பு ஆகியன வகைக்கு 20 கிராம் சேர்த்து 1 லீற்றர் பசும்பாலில் கரைக்கவும். இத்துடன் எள்நெய் (நல் லெண்ணெய்) 1 லீற்றர் சேர்த்து நீர் சுண்டக் காய்ச் சி வடித்து ஆறவிட்டு போத் தலில் அடைத்துக் கொள் ளவும். இதனை கரப்பா னிற்கு பூசிவர முற்றாக குணமடையும்.




- ஆறாத பிளவைப் புண்களுக்கு புங்கின் வேரை சேகரித்து அதனைச் சீவிப்பிழிந்தால் பால் கிடைக்கும் இதில் அதாவது புங்கம் வேர்ப்பால் 100 மில்லி, தேங்காய்ப்பால் 100 மில்லி சேர்த்துக் காய்ச்சி வடித்து ஆறாத புண்களுக்கு பூசியும், திதியாகவும் பயன் படுத்திவர ஆறாத புண்கள் விரைவில் முற்றாக ஆறும்.
- வாதவீக்கம், வலி போன்றவற்றிற்கு இதன் வேரை நன்றாக பட்டுப்போல் அரைத்துப் பூசலாம்.
- புங்கம் நெய், ஆமணக்கு நெய், வேம்பு நெய் வகைக்கு 1 லீற்றர் கலந்து வைக்கவும் வேர்க்கொம்பு, மிளகு, சீரகம், திப்பிலி, ஓமம், கராம்பு, சதகுப்பை, வசம்பு, பெருங்காயம், வெள்ளைப் பூண்டு ஆகியவை ஒவ்வொன்றும் 10 கிராம் மோரில் அரைத்து போட்டு கலக்கவும். இதனை நாளும் 10 மில்லி அளவு காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர (40 நாட்கள்) எல்லா வகையான தோல் நோய்களும் குணமா கும். புண்களுக்கு பூசவும் பயன்படும். அதா வது இதன் கற்கத்தை (கட்டையை) வடித்து எடுத்து தேங்காய் எண்ணெய் விட்டுக் குழைத் துப் பூசலாம். இதனை கும்பமுனி எனும் சித்தர், புங்கம்பால் புண்ணாற்றும், பொல் லாத வாய்வகற்றும் தங்கம்போல் மெய்யளிக் கும் தான், என தோல்நோய்களுக்கு, தோல் அழகிற்கும் முக்கியமான மூலிகையாக எடுத்தியம்பியுள்ளார்.
- புங்கம் வேர் + தும்பை வேர் சம அளவில் சேர்த்து அரைத்து 30 கிராம் அளவு உள்ளுக்கு கொடுக்க பாம்புக்கடி விடத்திற்கு கொடுக்கலாம்.
- நீரிழிவு நோயாளிகள் புங்கம் பூக்காலங்களில் பூக்களை சேகரித்து நன்றாக கழுவி சுத்தப்படுத்தி, நிழலில் உலர்த்தி வாணலியை அடுப்பேற்றி சிறுபசுநெய் விட்டு உருக கொஞ்சம், கொஞ்சமாக புங்கம் பூக்களை முறுவலாக வறுத்தெடுத்து மீண்டும் நிழலில் உலர்த்தி பொடித்து வைத்துக்கொள்ளவும் 5 கிராம் அளவு காலை, மாலை நீரிழிவு நோயாளிகள் வெந்நீரில் அருந்த இரத்தத்தில் குளுக்கோசின் அளவு கட்டுப்படும்.



### புங்கமரப் பால்:

- புங்கின் அடிமரத்திலும், வேரில் இருந்து எடுத்து இடிக்க பால்வரும். இந்தப் பாலுடன் சமஅளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து பாலுடன் உடம்பில் தேய்த்து குளிக்க வாத வலிகள்,தோல் நோய்கள், சொறி,படை நீங்கி தோல் பளபளப்பாகிவிடும்.

### புங்கநெய் :

- காயினுள் இருக்கும் விதையைச் சேகரித்து செக்கில் விட்டு ஆட்டி புங்கநெய் தயாரிக்கலாம். இந்த நெய்யை உடம்பில் பூசிக் குளிக்க கண்களுக்கு தெரியாத கிருமிகளை அழித்து கரப்பான், சொறி, சிரங்குகளை போக்கி உடலுக்கு அழகும், ஒளியையும் கொடுக்கும். புங்கம் பூக்கள் 35 கிராம் எடுத்து நல்லெண்ணெய் 500 மில்லி சேர்த்து காய்ச்சி தைலம் தயாரித்து மேல் பூச்சாக கரப்பான் படைகளுக்கு பூச நீர் வடிதல் நீங்கி புண்கள் விரைவில் ஆறும்.
- புங்கம் பூக்களை சுத்தம் செய்து உலர்த்தி பின் பொன் வறுவலாக வறுத்து இடித்து காற்றுப் புகாத பாத்திரத்திலே பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு காலை மாலை 100-200 மில்லி கிராம் அளவு தொடர்ச்சியாக 40 நாட்கள் சாப்பிட்டு வர பால்வினை நோய்கள் தணியும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.



காரை கிட்ஸ்பார்க் சிறுவர் பாடசாலையின் வருடாந்த கலைநிகழ்வுகள் அண்மையில் காரைநகர் கிட்ஸ்பார்க் மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வினை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தீவக வலய கல்விப் பணிப்பாளர் இ.ராதாகிருஸ்ணன் உரைநிகழ்த்துவதனையும், மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: காரைநகர் செய்தியாளர்)

## பஜனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் தென்புலோலி பற்றளை சித்தி விநாயகர் ஆலய பஜனைக் குழுவின் பஜனை இடம் பெறவுள்ளது. (4-35)

## கலந்துரையாடல்

(மருதங்கேணி)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடத்தும் கலைஇலக்கிய விழா பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு துன்னாலை வடக்கு அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்தில் சங்கத்தலைவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கலைஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கி கலை இலக்கிய விழாவுக்கான கலை நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்து தருமாறு சங்கம் கேட்டுள்ளது. (4-35)

## "சிவநெறி இறுவட்டு" வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையின் *சிவநெறி இறுவட்டு* வெளியீட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசிலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி கந்தையா அரியநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீனக் குரு முதல்வரும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் வழங்கவுள்ளார். (4)

## வடலியடைப்பு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்-அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலிமேற்கு வடலியடைப்பு பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் திங்கள் சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

அமைச்சரின் யாழ் பணிமனையில் இடம் பெற்ற மேற்படி சந்திப்பின்போது வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகிகளும், வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலைய பிரதிநிதிகளுமே இச்சந்திப்பினை மேற்கொண்டவர்களாவர்.

குறிப்பாக வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு புதிதாக வகுப்பறைக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர் வலியுறுத்திய அதேவேளை பிரதேச குடிநீர்த் தேவையினைப் பூர்த்திசெய்யும் பொருட்டு குடிநீர்த்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த வேண்டும் என சனசமூக நிர்வாகத்தினர்வேண்டு கோள் விடுத்த னர்.



மேற்படி வேண்டு கோள்கள் தொடர் பாக கவ னமெடுத்த அமைச்சர் டக்ளஸ் எதிர் வரும் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மூலம் பாடசாலை கட்டட தேவையினை நிறைவேற்ற முடியும் என்று தெரிவித்தார்.

மேலும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய பிரதிப் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு குடி நீர் வழங் கக்கூடிய நிலைமைகளையும் கேட்டறிந்தார். பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்ட கோரிக் கைகள் கட்டங்கட்டமாக நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்துக் கொண்ட அவர் விரைவில் தாம் அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். (2)

## சூழல் பாதுகாப்பு வரியை மீளப்பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த தை மாதம் 1,4 திகதிகளில் நல்லூர் பிரதேச செயலகத்தால் மோட்டார் வாகன பிரிவில் மோட்டார் சைக்கிள் மற்றும் கார் என்பவற்றிற்கு வரி செலுத்தும் போது சூழல் பாதுகாப்பு வரியும் சேர்ந்து அறவிடப்பட்டிருந்தது.

மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த சூழல் பாதுகாப்பு வரி நல்லூர் பிரதேச செயல கத்தால் உரியவர்களுக்கு மீள கையளிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி வரியை கட்டி பெற்றுக் கொள்ள வாகன உரிமையாளர்கள் ஜுன் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர்நல்லூர் பிரதேச செயலக கணக்கு கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (2-7)

## யாழ்ப்பாணத்தின் நீர்வளம் நூல்வெளியீட்டு விழா

(அல்வாய்)

நீரியல் ஆய்வாளர் க.நடனசபாபதி எழுதிய *யாழ்ப்பாணத்தின் நீர்வளம்* என்ற நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் க.ராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் க.கணேஸ் கலந்து சிறப்பிப்பதுடன் நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் பீட சிரேஷ்ட




விரிவுரையாளர் கலாநிதி நா. சிவபாலன் நிகழ்த்துவார். கருத்துரைகளை யாழ். மீள் எழுச்சித்திட்டப்பிரதித் திட்ட பணிப்பாளர் வே. விஸ்வலிங்கம், வடமராட்சி வடக்கு பிரதேச செய லர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன், ஓய்வு பெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி ஆகியோர் வழங்கவுள்ளனர். (4-19)

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் புகைப்பொருள் எதிர்ப்பு தினமும் மாணவர்களை கௌரவித்தலும்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினமும் 2009 இல் வலிகாமம் வலய பாடசாலைகளில் இருந்து க.பொ.த (சா/த) உயர்தரப் பரீட்சைகளில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவித்தலும் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில சம்மேளனத் தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வலிதென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் யாழ் மார்பு நோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். யமுனானந்தா, ஈ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் பே. நாகரத்தினம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## "ஞானச்சுடர்" நூல் வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச்சுடர் சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல்வெளியீட்டுரையை பொலிகண்டி கிராம உத்தியோகத்தர் சி.சிவபாலசிங்கம் வழங்கவுள்ளதுடன் நூல் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரைகணேசமூர்த்தி வழங்கவுள்ளார். (4-35)

## திருமுறைத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இணுவில் ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ விஸ்வேஸ்வரர் சுவாமி தேவஸ்தான அனுசரணையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருமுறைத் திரு விழா நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு மேற்படி ஆலயத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்ற உபதலைவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மாணவி செல்வி பானுரேகா விஸ்வநாதனின் திருமுறைப்பண்ணிசை இடம்பெறவுள்ளதுடன் நாயன்மார் நால்வர் பன்னிரு திருமுறைச்சுவடிகளுக்கு விசேட சோபசார பூசை என்பனவும் நடைபெறவுள்ளது. (2-4)

## கலச கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)


வடமராட்சி தென்புலோலியூர் அருள்மிகு உபய கதிர்காம ஆலய தான்தோன்றிய ஸ்ரீ சங்கர சண்முக தேவஸ்தான புதிய வசந்த மண்டப கலச கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 11 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து நித்திய பூசை, சக்கர சண்முகருக்கு வில்வ அர்ச்சனை என்பன இடம்பெற்று தொடர்ந்து வசந்தமண்டப பூசை நடைபெற்று பெருமான் வீதி உலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது. (4-35)

## கணனிப்பயிற்சி

இலங்கை செஞ்சிலுவை சங்கம் சண்டிலிப்பாய் பிரிவில் புதிய கணனி பயிற்சி நெறி எதிர்வரும் ஜீன் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியை பெற விரும்புபவர்கள் பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை 3 ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை எனும் முகவரியில் அமைந்துள்ள பிரிவு காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் ஜீன் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னதாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு பிரிவு அலுவலகத்துடன் அல்லது 0215670405 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என இலங்கை செஞ்சிலுவைச்சங்க சண்டிலிப்பாய் பிரிவு செயலாளர் அறிவித்துள்ளார். (4)

# தென் சீனாவில் பெருவெள்ளம்
# 115 பேர் பலி;21 பேரைக் காணவில்லை



தென் சீனாவில் பலத்த மழை காரணமாக 13 மாவட்டங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தில் மூழ்கி 115 பேர் பலியாகியுள்ளனர். 21 பேர் காணாமல் போயுள்ளனர். 6 இலட்சத்து 85 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வெள்ள அனர்த்தத்தினால் சுமார் 2.2 பில்லியன் வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தொடர்பு அமைச்சு இணையத்தளம் தெரிவிக்கின்றது.

தென் சீன மாநிலமான குகாங்டோங், சிச்சுவான் ஸீஜியாங் ஆகிய மாகாணங்களில் 80 ஆயிரம் வீடுகள் பாதிப்புக்குள்ளானதுடன் 10 மில்லியன் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக அரச வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் அனர்த்த நிவாரண தலைமையகத்தின் இணையத்தளம் தெரிவித்துள்ளது. (2-4)

## இலங்கையில் நடைபெறவுள்ள
# இந்திய திரைப்பட விழாவினை கண்டித்து
# கும்பகோணத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் நடக்க இருக்கும் சர்வதேச இந்திய திரைப்படவிழாவை தடுத்து நிறுத்த வலியுறுத்தி, தமிழ்நாடு மாணவர் ஒருங்கிணை குழு சார்பில் கும்பகோணத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழக கொளத்தூர் மணி உள்பட கட்சி பாகுபாடின்றி தமிழின உணர்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர். பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய கொளத்தூர் மணி, இந்தியாவில் இருந்து சில நிறுவனங்கள் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து, அங்கு தொழில் துவங்குகின்றன. அந்த நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும். மேலும் அந்த நிறுவனத்துடன் எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் ஒதுக்க வேண்டும்.

திரைப்படவிழாவுக்கு குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்த நடிகர்கள், நடிகைகள் யாரேனும் சென்றால் அவர்களின் படங்கள் திரைக்கு வரும் போது மாணவர்கள் புறக்கணிக்க வேண்டும். அந்த நடிகர், நடிகை படங்கள் இனி தமிழகத்தில் எந்த இடத்திலும் திரையிட விடக்கூடாது.

தமிழக திரையுலகம் உள்பட இந்திய திரையுலகத்தை நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் இலங்கை பயணத்தை இரத்துச் செய்யுங்கள் என்றுதான் என கொளத்தூர் மணி பேசினார். (2-4)

# கிரகங்களை உண்ணுகின்ற நட்சத்திரங்கள் கண்டு பிடிப்பு

சூரியன் போன்றதொரு நட்சத்திரம் பூமி போன்றதொரு கிரகத்தை விழுங்கும் காட்சிகளை ஹபெல் தொலைக்காட்டி துல்லியமாக படம் பிடித்துள்ளது.

நட்சத்திரங்கள் அருகாமையில் உள்ள கிரகங்களை விழுங்குவது தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட்ட போதிலும் ஹபெல் தொலைக்காட்டி முதல் தடவையாக இந்தக் காட்சிகளை துல்லியமாக படம் பிடித்துள்ளது.

ஹபல் தொலைக்காட்டியினால் படம் பிடிக்க முடியாத தொலைவில் இருந்த கிரகம் ஒன்றையே இவ்வாறு படம் பிடிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 500 செல்சியஸ் பாகை வெப்பமுடைய நட்சத்திரமொன்று வெஸ்ப்12பி என்ற கிரகத்தை விழுங்கியுள்ளது. குறித்த கிரகம் நட்சத்திரத்திற்கு மிகவும் அருகாமையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூமியிலிருந்து ஆறுநூறு ஒளியாண்டுகள் தொலைவில் இந்த கிரகம் காணப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

இக்கிரகம் 2008 ஆம் ஆண்டு பிரித்தானிய வானியல் விஞ்ஞானிகளினால் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# துருக்கியில் சுற்றுலா பஸ் கவிழ்ந்ததில் 16 பேர் பலி

துருக்கியில் உள்ள அன்டாலியா ஒரு சுற்றுலா நகரமாகும். இங்கு ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, இங்கிலாந்து மற்றும் ரஷ்யாவில் அருந்து அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள்.

இந்த நிலையில், அன்டாலியா சென்று கொண்டிருந்த ஒரு சுற்றுலா பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஓடி வீதியோர பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. இதில், 16 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள். தகவல் அறிந்ததும் மீட்புக் படையினர் அங்கு விரைந்து சென்று நிவாரண பணியில் ஈடுபட்டனர். (2-6)

# உலகில் மிகச் சிறிய டிரான்சிஸ்டர்: சர்வதேச விஞ்ஞானிகள் உருவாக்கினர்

(வோஷிங்டன்)

உலகில் மிகச்சிறிய டிரான்சிஸ்டரை சர்வதேச விஞ்ஞானிகள் குழுவினர் உருவாக்கியுள்ளனர்.

இதன் உதவியுடன் இப்போது இருப்பதை விட மிகச்சிறிய அளவிலும் அதிவேகமாகவும் செயல்படும் சுப்பர்ஃபாஸ்ட் கணனிகளை உருவாக்குவது சாத்தியமாகும்.

இந்த புதிய டிரான்சிஸ்டர் ஒரு மீற்றரில் 400 கோடி ஒரு பங்கு நீளமுடையது. மிக மிகச் சிறியதாக இருந்தாலும் இது சாதாரண டிரான்சிஸ்டர்கள் போலவே செயல்படும்.

இதனை மைக்ரோஸ்கோப் கொண்டே சரியாகப் பார்க்க முடியும். மிக அற்புதமான கண்டுபிடிப்பு விஞ்ஞான வளர்ச்சியில் இது ஒரு மைல்கல். சிலிக்கானைப் பயன்படுத்தி இது உருவாக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முறையில் சிறப்பாக செயற்பட்டுள்ளது என்று விஞ்ஞானிகள் குழுவில் இடம் பெற்றுள்ள மைக்கேல் சைமன்ஸ் கூறியுள்ளார். (2-4)

## தொழில் அதிபராக நடித்த நிருபரிடம்
# இலஞ்சம் கேட்டு மாட்டிக் கொண்ட இங்கிலாந்து ராணியின் மருமகள்

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் 2 ஆவது மகன் இளவரசர் ஆன்ட்ரூ. இவரது மனைவி சாரா பர்கூசன்.

நிஸ்ஆப்தி வேர்ல்டு பத்திரிகையின் நிருபர் ஒருவர் இவரை சந்தித்தார். அப்போது அவர் தன்னை இந்தியத்தொழில் அதிபர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார் இங்கிலாந்து நாட்டுடன் வர்த்தக உறவு வைத்துக் கொள்ள விரும்பு வதாகவும் இது தொடர்பாக ஆன்ட்ரூவை சந்திக்க விரும்புவ தாகவும் அவர் சாராவை கேட்டுக்கொண்டார்.

ஆன்ட்ரூழவ சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டுமானால் தனக்கு ரூ3 கோடி இலஞ்சம் தர வேண்டும் என்று சாரா கேட்டார். இதற்கு சம்மதித்த நிருபர் முதல் கட்டமாக ரூ28 இலட்சத்தை சாராவிடம் கொடுத்தார். அதை அவர் வீடியோவாக படம் எடுத்தபோது தான் தன்னிடம் பணம் கொடுத்தவர் நிருபர் என்று சாராவுக்கு தெரிந்தது.

உடனே சாரா அந்த பணத்தை திருப்பி கொடுத்ததுடன் மன்னிப்பும் கோட்டுக்கொண்டார். (2-4)

# இலங்கை திரைப்பட விழாவை புறக்கணிக்க ஐஸ்வர்யாராய் முடிவு



நடைபெறும் சர்வதேச இந்திய திரைப்பட விழாவை திரைப்பட நட்சத்திரங்கள் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழர் அமைப்புகள் வற்புறுத்தி வருகின்றன.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி திரைப்பட விழாவிற்கு விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ள மெகாஸ்டார் அமிதாப்பச்சன் வீட்டின் முன் தமிழ் அமைப்புகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுது.

எனினும் இப்பிரச்சினை தொடர்பாக அமிதாப்பச்சன் எந்த அதிகாரப் பூர்வமான அறிவிப்பையும் வெளியிடவில்லை இந்நிலையில் அமிர்தாப்பச்சனின் மகனான நடிகர் அபிஷேக் பச்சனும், மருமகளும் பிரபல நடிகையுமான ஜஸ்வர்யாராயும் இலங்கையில் நடைபெறும் திரைப்பட விழாவில் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிய வந்துள்ளது.

ஐஸ்வர்யாராய் தற்போது சென்னையில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துடன் இணைந்து *எந்திரன்* படத்தில் நடித்து வருகிறார். அவர் சென்னையில் இருந்து திரும்பியதும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் பிரான்சு தலைநகர் பாரிசுக்கு செல்வார். அங்கு லாங்ஜின்ஸ் என்ற கடிகார கம்பெனி சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஐஸ்வர்யா ராய் கலந்து கொள்கிறார்.

எனவே அவர் இந்த சமயத்தில் இலங்கைக்கு செல்ல வாய்ப்பு இல்லை என்று அவ்ருடைய செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இதே போன்று அபிஷேக்பச்சனின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், இலங்கையில் திரைப்பட விழா நடைபெறும் சமயத்தில் துருக்கி நாட்டில் உள்ள இஸ்தான்புல் நகரில் நடைபெறும் அபினய் தியோவின் கேம் படத்தின் படப்பிடிப்பில் அபிஷேக் கலந்து கொள்கிறார் என்று தெரிவித்தார். (2-4)

# பெருவில் நிலநடுக்கம்

தென்அமெரிக்க நாடான பெருவில் திங்கட்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் வீச்சு ரிக்டர் அளவு கோலில் 5.9 அலகாகப் பதிவானது.

நிலநடுக்கம் அந்நாட்டின் தென்பகுதியில் உருவானது. இது தலைநகர் லிமாவில் மையம் கொண்டதாக அமெரிக்காவின் நில நடுக்க ஆய்வு மையம் கூறியுள்ளது. இந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு, பொருட் சேதம் குறித்த உடனடித் தகவல் ஏதும் இல்லை.

ஆனால் அதிர்வை பல கிலோ மீற்றர் தொலைவு வரை வசிக்கும் மக்கள் உணர்ந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நில நடுக்கத்தால் அயகுசோ நகரில் கட்டடங்கள் இலேசாக அதிர்ந்ததாகவும் இதனால் மக்கள் அலறியடித்துக் கொண்டு வீதிகளுக்கு ஓடிவந்ததாகவும் அந்நாட்டு வானொலி கூறியுள்ளது. (2-4)

# எதியோப்பிய தேர்தலில் ஆளும் கட்சி மீண்டும் வெற்றி

(அட்டிஸ்அபாபா)

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் பாராளுமன்ற தேர்தல் நடந்தது. இதில் பிரதமர் மெலஸ் ஷெனாவி தலைமையிலான எதியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி கட்சியும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியும் போட்டியிட்டன. வாக்குப் பதிவு நடந்து முடிந்ததை தொடர்ந்து நேற்று முன்தினம் வாக்கு எண்ணிக்கை நடந்தது.

தொடக்கத்தில் இருந்தே ஆளும் கூட்டணி முன்னிலையில் இருந்தது. நேற்று வரை தேர்தல் நடந்து 11 மாகாணங்களின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அதில் 9 மாகாணங்களில் ஆளும் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.


இந்த தகவலை எதியோப்பியா தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஆனால் சில எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. தேர்தலில் தில்லுமுல்லு செய்து ஆளும் கட்சியினர் கள்ள வாக்கு போட்டுள்ளனர் என்று கூறியுள்ளனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் கடும் வன்முறை ஏற்பட்டது. அப்போது 193 பேரும் 7 பொலிஸாரும் கொல்லப்பட்டனர். எனவே தற்போதைய தேர்தல் ஐரோப்பிய யூனியனின் மேற்பார்வையில் நடந்தது. அதில் எந்த விதமான வன்முறை சம்பவங்களும் நடைபெறவில்லை. (2-4)



வெள்ளத்தில் மிதக்கும் போலந்து....

# 3டி தொலைக்காட்சி



பிளாஸ்மா ரி.வி, பிளாட் ரி.வி வரிசையில் 3டி ரி.வி ஜப்பானில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

3டி படங்களுக்கு மக்கள் மத்தியில் எப்போதும் மவுசு இருப்பதால் இந்த ரி.வி.யை அறிமுகம் செய்துள்ளது சொனி நிறுவனம். ரி.வி.யை பார்க்கவே பிரத்யேக கண்ணாடியும் வழங்கப்பட்டு விடுவதால் 3டி படங்களை ஜாலியாகக் கண்டு மகிழ முடிகிறது. எல்லா நிகழ்ச்சிகளையும் 3டி முறையில் பார்க்க வசதியாக இந்த ரி.வி. வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## சைக்கிளை இயக்கும் பற்றரி !



பற்றரி வாகனம் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஜப்பானில் இப் படி ஒரு இருசக்கர வாகனம் அறிமுகமாகியிருக்கிறது. 'இவி-நியோ' என்றழைக்கப் படும் இந்த வாகனம் பற்றரி மூலம் இயங்குகிறது. ஒரு முறை இதை சார்ஜ் செய்தால் போதும் 30 கி.மீ.க்கு மேல் வாகனம் ஓடும். இந்த ஆண்டு இறுதியில் இது சந்தைக்கு வர இருக்கிறது.

### ஈயம் தந்த ஓட்டம்!

பெற்றோலில் கலக்கப்படும் ஒருவகை ஈயம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆண்டு – 1921. இதனால் வாகனங்கள் எளிதாக இயங்கின. ஆனால் ஈயம் கலந்த பெற்றோல் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதோடு மனிதர்களுக்கு உடல்நலக் கேட்டை உருவாக்கும் என்பதால் ஈயம் கலப்பதைத் தவிர்த்தார்கள்.

### வள்ளுவர் கைவண்ணம்

உலகப் புகழ்பெற்ற திருவள்ளுவர் திருக்குறளை மட்டுமே எழுதியிருக்கிறார் என்று நினைத்தால் அது தவறு. ஞான வெட்டி, நவரத்தின சிந்தாமணி, பஞ்சரத்தின திருப்புகழ், ஒப்பு சாஸ்திரம் ஆகியவையும் வள்ளுவரின் கைவண்ணத்தில் உருவானவையே!

### அக்ளி பழம்

திராட்சை, டான்செரின், ஒரேஞ்ச் பழங்களை தனித்தனியே சாப்பிட்டால் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ருசி இருக்கும். ஆனால் இந்த மூன்றையும் ஒன்றாக்கி கலப்பின முறையில் உருவான பழம் எப்படி இருக்கும்? கொஞ்சம் முகம் சுளிக்கிறீர்கள் இல்லையா? இந்த வகை பழத்தின் பெயர் அக்ளி. அமெரிக்க தயாரிப்பு இது!




# உலகைச் சுற்றி

AROUND THE WORLD

ஆர்.யூ.பாலமுருகன்


## சூழல் காக்கும் அற்புத தீவு!





பரபரப்புக்குப் பெயர்போன தேசம் அமெரிக்கா. சீறிப் பறக்கும் வாகனங்களால் எல்லா நகரங்களுமே எப்பவும் பிஸி. ஆனால் இங்குள்ள ஒரு தீவு நகரில் பரபரப்பையும் சலசலப்பையும் பார்க்கவே முடியாது. அந்த நகரின் பெயர் மாக்கினாக் தீவு. கார், பஸ், மோட்டார் வாகனங்கள் என பெற் றோல், டீசல் வாகனங்கள் எதையும் இங்கு காண முடியாது. குதிரை வண்டி அல்லது சைக்கிள் தான் இந்தத் தீவு மக்களின் வாகனங்கள். இதற்குக் காரணம் உள்ளது.

மாக்கினாக் தீவு மிச்சிகன் மாகாணத்தில் ஹுரோன் நதியில் சுமார் 9.8 சதுர கி.மீ நிலப்பரப்பில் அமைந்துள்ள ஒரு தீவு. இயற்கை எழில் கொஞ்சும் இந்நகரை எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். இந்தத் தீவில் 1890களில் புகையைக் கக்கிக்கொண்டு செல்லும் வாகனங்கள் பல இருந்தன. இதனால் இத்தீவு வேகமாகவே மாசடைந்தது. சூழலைப் பாதுகாக்க 1898 இல் இங்கு கார், பஸ் போன்ற மோட் டார் வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. பஸ்களுக்கு பதிலாக குதிரை வாகனங்களும் கார் மற்றும் இரு சக்கரவாகனங் களுக்கு பதிலாக சைக்கிள்களும் பயன்பாட்டுக்கு வந்தன. 112 ஆண்டு களுக்கு முன் விதிக்கப்பட்ட தடை இன்னமும் அங்கு தொடர்கிறது! ஆரவாரமே இல்லாமல் சொக்க வைக்கும் வனப் புடன் காட்சியளிக்கும் மாக்கினாக் தீவு இப்போது அமெரிக்கா வின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலம்!



### சாப்பிட சாப்பிட பரிசு !



அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் 'ஜலாபேனோஸ்' என்ற உணவை குறைந்த நேரத்தில் அதிகம் சாப்பிடும் போட்டி சமீபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்டோர் செமையாக வெளுத்துக் கட்டிய இந்தப் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு தோமஸ் மற்றும் பேட்ரிக் இருவரும் முன்னேறினர். இறுதிச்சுற்றில் இருவரும் போட்டி போட்டிக் கொண்டு ஜலாபேனோஸ்சை விழுங்க, யாருக்கு முதல் பரிசு தருவது என்று ஒரே குழப்பம். இறுதியில் தோமஸை விட பேட்ரிக் அதிகமாகச் சாப்பிட்டதாக அறிவிக்கப்பட்டு ஜலாபேனோஸ் பட்டம் வழங்கப்பட்டது.

## ஒரு வீடு இரு விருது





இந்திய திரையுலகின் கௌரமிக்க விருது தாதா சாகிப் பால்கே விருது. இந்த விருதை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் அடுத்தடுத்து வென்று சாதித்திருக்கிறார்கள். அந்தக் திரை பிரபலங்கள்- பிருத்வி ராஜ்கபூர், ராஜ்கபூர்.

### வளரும் ஈபிள்!

உலகப் புகழ் பெற்ற ஈபிள் கோபுரம் கட்டி 120 ஆண்டுகள் ஆகிவிட்டன. வேறு எந்த உயரமான கட்டட அமைப்பையும் விட இது வித்தியாசமானது. மிகவும் வெப்பமான நாட்களில் இந்த கோபுரம் கொஞ்சம் வளர்ந்துவிடும். சுமார் 6 அங்குலம் வரை உயரும். முற்றிலும் உலோகத்தாலேயே உருவாக்கப்பட்டிருப்பதால் வெப்பத்தால் விரிவடைந்து வளர்கிறது ஈபிள்.

### சணலாகும் செடி!

கோர் கூரஸ் ஒலீடோரியூஸ் என்ற செடியிலிருந்து எடுக்கப்படும் நார் தான் சணல். செடி எப்படி சண லாகிறது? சுமார் 3 மீற்றர் உயரம் வளரக் கூடியது சணல் செடி. இதை வெட்டி ஓரிடத்தில் அடுக்கிக்காய வைக்க வேண்டும்.

செடியின் இலைகள் எல்லாம் உதிர்ந்த பின்னர் அவற்றிலிருந்து தண்டுப் பகுதிகளை மட்டும் தனியே பிரித்தெடுத்து அவற்றைக் கட்டுகளாகக் கட்டி தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். நன்றாக ஊறிய பின்னர் அந்தக் தண்டிலிருந்து நாரை மட்டும் உரித்து எடுக்க வேண்டும். இந்த நாரை நன்கு உலர வைத்தால் சணல் ரெடி! உலகில் இந்தியாவிலும் பங்களா தேஷிலும் தான் சணல் செடி அதிகம் பயிராகிறது.

### வட்டி வாங்கும் வங்கி!

வங்கியில் முதலீடு செய்தால் வட்டி கொடுப்பதுதான் வங்கிகளின் வழக்கம். ஆனால் சுவிற்ஸர்லாந்தில் உள்ள வங்கிகளில் முதலீடு செய்தால் முதலீடு செய்தவர் தான் வட்டி கட்ட வேண்டும்! வட்டித் தொகையைக் கட்ட முடியாமல் பலர் தம் முதலீட்டையே இழந்திருக்கிறார்கள். வங்கியின் இரகசிய எண்ணை மறந்து போனாலும் மாற்று எண் கிடைக்காது அங்கு.

நெற்றியைக் காயப்படுத்துவதைவிட முதுகை வளைத்துச் செல்வது நல்லது. ~ *இங்கிலாந்து*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரசியல் இராஜதந்திர வியூகத்தை கூட்டமைப்பு அமைக்க வேண்டும்

போர் நடந்த வன்னிப் பெருநிலப்பரப்பிற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

மிகப்பெரிய அழிவு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

ஒரு வருடத்திற்குப் பின்பான அவர்களின் அதிர்ச்சி அவர்கள் மட்டில் ஏற்புடையதாக இருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்கள் வன்னி யுத்தத்தின் பேரவலத்தை, பேரழிவை நேரில் கண்டு அனுபவித்தவர்கள். யுத்தத்தின் இறுதி நாளில் மட்டும் சுமார் இருபதாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர் என்ற தகவல்களினூடு அங்கிருந்து வெளியேறிய மக்களுக்கு நாம் எதுவும் சொல்ல வேண்டிய தேவையில்லை.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து குறைந்தது பத்து பன்னிரண்டு தடவைகள் இடம்பெயர்ந்தவர்கள் அவர்கள்.

எறிகணை வீச்சில் தலை சிதறிப்போனதை, கணவன் முன் மனைவி துடிதுடித்துப் பலியானதை, மனைவிக்கு முன் கணவன் கருகிப் போனதை, பெற்றோர் பார்த்திருக்க பிள்ளைகள் சுட்டுக் கொல்லப்பட்டதை, உயிரற்ற தாயின் உடலில் குந்தியிருந்த குழந்தையை,

இப்படி எத்தனை! எத்தனை! இவற்றையெல்லாம் நேரில் அனுபவித்தும், வெளியிடத்தில் இருந்தவர்கள் இணையத்தள வாயிலாகவும் பார்த்து, பதறி, சித்தம் கலங்கிச் செய்வதறியாது மலைத்து நின்று ஒரு வருடம் ஆகிற்று.

இப்போது மிகப் பெரிய அழிவு நடந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுமாயின் இதுவரை அவர்கள் ஏதுவும் அறியாதவர்களாக இருந்தார்கள் என்றல்லவா பொருள்படும்.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொருத்தப்பாடான கருத்துக்களை முன்வைப்பது கட்டாயம்.

அதே நேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமையும் தலைமைக்குக் கட்டுப்படுதலும் அவசியம் என்று கூறவேண்டிய தேவையை அக்கட்சியின் செயற்பாடுகள் சுட்டி நிற்கின்றன.

கூட்டமைப்பு என்று கூறிவிட்டு சுயேட்சைக் குழுவில் நின்று வெற்றி பெற்றதுபோல் கருத்து வெளியிடுவது கட்சிக்கும் அழகல்ல. இவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைத்த மக்களுக்கும் அழகல்ல.

அதேநேரம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் மக்கள் நன்கு அறிவர்.

ஆனாலும் அரசியல் இராஜதந்திரங்களை முன்னிறுத்திச் செயற்படுவது கட்டாயமானதாகும்.

தேர்தல் காலங்களில் இந்தியாவின் உதவி எமக்குத் தேவை. இந்தியாவை பகைத்துக் கொள்வது எங்கள் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

இவ்வாறெல்லாம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருந்தார்.

எனவே கூட்டமைப்பினர் இந்தியாவின் உதவியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, மீள் குடியேற்றம் என்பவற்றை வலியுறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வெறுமனே அறிக்கை விடுவதால், கடிதம் எழுதுவதால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

# த.தே.கூட்டமைப்பு அனுமதி மறுப்பு சட்டத்திற்கு முரணான செயலாகும்

## விஜித ஹேரத் கண்டனம்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த நிலையில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக முகாம்களில் வாழ்ந்து வருகின்ற தமது மக்களை சந்திப்பதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடை விதிக்கப்பட்டதன் மூலம் அரசாங்கம் தவறிழைத்து விட்டது என ஜனநாயக தேசியக் கூட்டணி குற்றம் சாட்டியுள்ளதுடன் தமது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாதங்கள் மற் றும் அவர்களது உரிமைகள் பறிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் கூட்டணி மேலும் தெரிவித் துள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற யுத்தத்தின் போது இடம் பெயர்ந்த நிலையில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந் தவர்களில் ஒரு தொகுதியினர் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த மக்களைச் சந்திப்பதற்கு இதுவரை காலம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வாரத்தில் இதற்கான அனுமதி கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வன்னியில் சில மீள் குடியேற்ற பிரதேசங்களுக்கு விஜயத்தை மேற்கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு வவுனியா செட்டிக்குளம் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்திப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரம் அங்கு அனுமதிக்காகக் காத்திருந்த போதிலும் பாதுகாப்புத் தரப்பில் இருந்து அனுமதி கிடைக்காமையினால் எம்.பிக்கள் குழு ஏமாற்றத்துடன் திரும்ப நேரிட்டது. இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஜனநாயக தேசியக்கூட்டணியின் செயலாளரும் எம்.பியுமான விஜிதஹேரத் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றி வருவதாக அரசாங்கம் கூறுகின்றது. அத்துடன் அவர்களது சுதந்திர நடமாட்டம் குறித்தும் முகாம்களில் தங்கியிருப்போரை சென்று பார்வையிட முடியும் என்றும் அரசாங்கமே அறிவித்திருந்தது.

இந்நிலையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்கள் செட்டிக்குளம் முகாமுக்கு செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டமையானது சட்டத்திற்கு முரணானது என்று கூற வேண்டும். வடக்கு- கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்பிக்களை தமது பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளனர். அதேபோல் அந்த மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள் தமது மக்களின் சுகதுக்கங்களில் பங்கெடுத்துக்கொள்வதற்கான உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

அந்த மக்களது குறைபாடுகளை தெரிந்துகொள்வதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் உரித்துடையவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அவர்களுக்கான அனுமதியை மறுத்ததன் மூலம் அரசாங்கம் தவறிழைத்து விட்டது. இவ்வாறான தவறுகளே குறித்த சமூகம் விரத்தியடைகின்ற நிலையையும் அத்துடன் அநாவசிய பிரச்சினைகளையும் தோற்றுவிப்பதற்கு காரணங்களாக அமைந்து விடுகின்றன.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டமையானது அவர்களது வரப்பிரசாதங்களை கேள்விக்குட்படுத்துவதாகும். இது நல்லாட்சிக்கு பொருத்தமானதல்ல என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

கூட்டமைப்பு எம்.பிக்கள் முகாம்களுக்கு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றார். (2-4)

# எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பாக அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்கள் பிரதியமைச்சர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

தொலைபேசிப் பாவனைக்கும் வரையறை விதிக்கப்பட்டுள்ளதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிற்கு மேல் பயன்படுத்தப்படும் எரிபொருள் மற்றும் தொலைபேசி பாவனைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது என்றும் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் ஒவ்வொரு அமைச்சின் செயலாளர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. அதன் பிரகாரம் மேல் மாகாணத்திற்கு வெளியிலிருக்கின்ற அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு பெற்றோல் வாகனத்திற்கு மாதமொன்றுக்கு 750 லீற்றர் பெற்றோலும் டீசல் வாகனத்திற்கு மாதமொன்றுக்கு 600 லீற்றர் டீசலும் வழங் கப்படும்.

மேல் மாகாணத்திற்குள் இருக்கின்ற அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்கு 600 லீற்றர் பெற்றோலும் டீசல் வாகனங்களுக்கு 500 லீற்றர் டீசலும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல காரியாலய தொலைபேசிகள் இரண்டிற்கு 20 ஆயிரம் ரூபாவும் அமைச்சர் பிரதியமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கான தொலைபேசிக்கு 10 ஆயிரம் ரூபாவும் கையடக்க தொலைபேசிக்கு 10 ஆயிரம் ரூபாவுமே வழங்கப்படும்.

இதேவேளை அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் பயன்படுத்தும் வாகனங்களுக்கும் அண்மையில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதுடன் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை பெற்றுக் கொடுப் பதற்காக வெளிநாட்டுக்கான பயணங்களுக்கு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (2-4)

## பலவந்தமாக கைப்பற்றப்படும் சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை

(கெழும்பு)

வீடுகள், வர்த்தக நிலையங்கள், வெற்றுக் காணிகள் ஆகியவற்றை பலவந்தமாக கைப்பற்றுவதுடன் அவற்றுக்கான போலி உறுதிப் பத்திரங்களை தயாரித்துள்ளவர்கள் தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் நேரடியாக முறைப்பாடு செய்யலாம்.

பொலிஸ் திணைக்களம் இதற்குரிய நடவடிக்கையை எடுத்துள்ளது. அதன்படி வெள்ளிக்கிழமை தோறும் பொலிஸ் மா அதிபரை பொதுமக்கள் சந்திக்கலாம் என்றும் அதன் போது இது தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக செய்யலாம் என்றும் பொதுமக்களை வலிபுறுத்துவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயகொடி தெரிவித்தார். முறைப்பாட்டு இலக்கம் 011 2325391 . (2-4)

## ஆறு புதிய வங்கிக்கிளைகள் வடமாகாணத்தில் திறக்கப்படவுள்ளன

பிரதேச பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு ஆறு புதிய வங்கிக் கிளைகள் எதிர்வரும் 7ஆம் திகதியன்று வட மாகாணத்தில் திறக்கப்படவுள்ளன. அதன் பிரகாரம் மக்கள் வங்கி, கிளிநொச்சி, மாங்குளம் மற்றும் பரந்தனில் மூன்று புதிய கிளைகளை திறக்கவுள்ளதுடன் கொமர்ஷல் வங்கி மற்றும் செலான் வங்கி என்பன கிளிநொச்சியில் தலா ஒரு கிளையினை திறக்கவுள்ளது.

நேசன் ட்ரஷ் வங்கி, யாழ்ப்பாணத்தில் ஓர் கிளையினைத் திறக்கவுள்ளது. இதன்படி, கிளிநொச்சியில் மூன்று புதிய வங்கிக் கிளைகளும் பரந்தன்,மாங்குளம் மற்றும் யாழ்ப்பாணத்தில் தலா ஒவ்வொருகிளையும் திறக்கப்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மேலும் புதிய கிளைகளை திறப்பதற்கு தேவையான மத்திய வங்கியின் ஒப்புதல்களும் வழங்கப்பட்டுள்ளன. (2-4)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## வீர இளைஞருக்கு



ஒளி மிக்கவன், எழுந்திரு. எப்போதும் தூயவனே எழுந்திரு. பிறப்பு இறப்பு அற்றவனே எழுந்திரு. எல்லாம் வல்லவனே, எழுந்து உனது உண்மை இயல்பை வெளிப்படுத்து. இந்த அற்ப நிலைகள் உனக்குத் தகுந்தவை அல்ல என்று சொல்லுங்கள்.

ஒழுக்க நெறியில் நில். வீரனாக இரு. முழுமனதுடன் வேலை செய். பிறழாத ஒழுக்கம் உடையவனாக இரு. எல்லையற்ற துணிவு உடையவனாக இரு. மதத்தின் கொள்கைகளைப் பற்றி உன் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே. ஒவ்வொருவரையும் நேசிக்க முயற்சிசெய்.

# இந்திய-இலங்கை கடல் எல்லையை அறிய தன்னியக்க சமிக்ஞை முறை

## கடற்றொழில் மீன்பிடி அமைச்சு தெரிவிப்பு

இந்திய- இலங்கை கடல் எல்லையை அறியக்கூடிய தன்னியக்க சமிக்ஞை முறையொன்றை அறிமுகப்படுத்த கடற்றொழில் மீன்பிடி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சர்வதேச கடல் எல்லையை மீறி மீன்பிடித்தலில் ஈடுபடுவதால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்திய கடல் எல்லைக்குச் செல்லும் இலங்கை மீனவர்கள் இந்திய படையினரால் கைதாவது அடிக்கடி இடம்பெறுவதால் இது தொடர்பில் நிரந்தர தீர்வு காண உள்ளதாக மீன்பிடி அமைச்சு உயரதிகாரி ஒருவர் கூறினார்.

அதன் ஒரு முக்கிய நடவடிக்கையாக இந்திய -இலங்கை கடல் எல்லையை அறியக் கூடிய தன்னியக்க சமிக்ஞை முறையொன்றை அறிமுகப்படுத்தவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது.இதன் மூலம் சட்ட விரோதமாக இந்திய கடல் எல்லைக்கு செல்வதை தடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2-4)

# நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமை உருவாக்கப்பட வேண்டும்

## இடதுசாரி கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமை உருவாக்கப்பட வேண்டுமென இடதுசாரி கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கம் யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இடதுசாரி கட்சிகள் இணைந்து இந்த கோரிக் ்கையை விடுத்துள்ளன.

இதற்கமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து அதற்கு பதிலீடாக நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்தவுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டுக்கு மிகவும் பொருத்தமான ஆட்சி முறைமை நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமை எனவும் இது தொடர்பாக ஆராயும் விசேட கருத்தரங்கொன்று எதிர்வரும் 31 ஆம் திகதி தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசியல் யாப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் தமது யோசனைத் திட்டங்களை அரசாங்கத்திடம் முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.(2-4)

# நிரந்தர நியமனம் பெற்றுத்தருமாறு தொழிற்பயிற்சி போதனாசிரியர்கள் அமைச்சர் டக்ளஸிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக யாழ் மாவட்டத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தற்காலிக நியமனத்தின் கீழ் பணிபுரிந்து வரும் போதனாசிரியர்கள் நிரந்தர நியமனத்தை பெற்றுத்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் பணிமனைக்கு வருகை தந்த யாழ். மாவட்ட தொழிற்பயிற்சி போதனாசிரியர்களே மேற்படி வேண்டுகோளை முன்வைத்தனர்.

ஏறக்குறைய ஐந்து வருட காலத்துக்கு மேலாக வருடா வருடம் புதுப்பிக்கப்பட்டு வரும் தற்காலிக ஒப்பந்த நியமனத்தின் அடிப்படையில் சாவகச்சேரி, சண்டிலிப்பாய், கோப்பாய், தெல்லிப்பளை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் போதனாசிரியர்களாக சேவையாற்றி வரும் தாம் பல நூற்றுக்கணக்கான தொழில் வல்லுனர்களை உருவாக்கிய போதும் தாம் இன்னும் நிரந்தர நியமனத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்பதை கவலையுடன் தெரியப்படுத்திய இவர்கள் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் தமது குடும்ப சூழலை கருத்திற் கொண்டு தமக்கு நிரந்தர நியமனங்களை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமைய தொழிற்பயிற்சி துறையில் அவர்கள் ஆற்றிவரும் சேவைகளை தாம் மதிப்புடன் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்துறை சார்ந்த அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் நிரந்தர நியமனம் பெற்றுத்தருவதாக அவர்களுக்கு உறுதியளித்தார். (2)

# ஐ.தே.க.கூட்டங்களை பகிஷ்கரிக்க தீர்மானம்

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களை பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருப்பதாக அந்தக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

எனினும் கட்சியிலிருந்து விலகுவது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை எனவும் டெயிலிமிரர் இணையத்தளத்திடம் குறிப்பிட்டார்.

சிலாபத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்றிருந்த கூட்டத்தின் போது, பாலித ரங்கே பண்டார தாக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தார்.

இந்நிலையிலேயே தான் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான சாந்த அபயசேகரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். (2-4)

# திரைப்பட விழாவில் அமிதாப்பச்சன் கலந்துகொள்வார் என நம்புகின்றோம்

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச இந்திய திரைப்பட விருது விழாவில் கலந்து கொள்வதில்லை என்று பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சன் எமது ஏற்பாட்டுக்குழுவுக்கு இதுவரை அறிவிக்கவில்லை. எனவே அவர் கலந்து கொள்வார் என்றே நம்புகின்றோம் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

சர்வதேச இந்திய திரைப்பட விருது விழா தொடர்பான ஏற்பாடுகள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது, சர்வதேச இந்திய திரைப்பட விருது விழாவில் பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன் கலந்துகொள்வார் என்று நம்புகின்றோம்.

அதில் எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. அவருடன் மேலும் பல முன்னணி நடிகர், நடிகைகள் கலந்துகொள்ளவுள்ளனர். அதாவது இதில் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள்.


இதேவேளை நடிகர் அமிதாப்பச்சன் இவ் விழாவில் கலந்து கொள்வாரா? இல்லையா? என கேள்வியெழுப்பப்படுகின் றது. எனினும் விருது விழாவில் கலந்து கொள்ளமாட்டேன் என்று அமிதாப்பச்சன் இதுவரை எமது ஏற்பாட்டுக்குழுவுக்கு உத்தி யோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

எனவே அவர் சர்வதேச இந்திய திரைப்பட விருது விழாவில் கலந்து கொள் வார் என்றே நாங்கள் நம்புகின்றோம். இந்திய திரைப்பட விருது விழா இலங்கை யில் நடைபெறுவதானது மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த விடயமாகும்.

இதன் மூலம் எமது நாடு பல்வேறு வழிகளில் பல நன்மைகளை பெறுகின்றது. எனவே இதனை சிறப்பாக நடத்தும் பொருட்டு விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம் என்றார். (2-4)

# மோட்டார் சைக்கிள்- இ.போ.ச.பஸ் விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)



நல்லூர் ஆலயம் முன்பாக மோட்டார் சைக்கிள்- இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஆகியன நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஊரெழு மேற்கு ஊரெழுவைச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை சுதாகரன் (வயது 38) அவரது மகளான சுதாகரன் சாருஜா (வயது-6) ஆகியோரே படுகாயமடைந்தவராவர்.

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச்சபை பஸ் நல்லூர் ஆலய முன் வீதி ஊடாக திரும்பும் வேளையிலே மோட்டார் சைக்கிளிடன் மோதி விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.(2-7)

# இலங்கை போரில் கணவன்மாரை இழந்த பெண்களுக்கு தென்னாபிரிக்கா உதவி

(கொழும்பு)

யுத்தம் காரணமாக வடமாகாணத்தில் தமது கணவன்மாரை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளைச் செய்ய தென்னாபிரிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

குறிப்பாக அவர்களின் குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு உரிய பங்களிப்பு வழங்கப்படும் என இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர் அதிகாரி பி.எம்.பீஃட்டோ தெரிவித்துள்ளார்.

3 நாள் பயணமாக யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த அவர் அரசாங்க அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் வட மாகாணத்தின் தற்போதைய பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இது தொடர்பான உதவிகளை வழங்கும் நோக்கில் கணவன்மாரை இழந்த பெண்கள் தொடர்பான விபரங்களை பிரதேச செயலாளர்கள் மூலம் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)


## யாழ்ப்பாணம் மாநகரசபை அறிவித்தல்

2010 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப்பத்திரம் (வாகன, மிருகவரி) உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், வங்கிகள் போன்ற உயர் தொழில் நிறுவனங்கள் 2010 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமக் கட்டணங்களையும் மற்றும் யாவரும் வாகன, மிருகவரி உரிம கட்டணத்தை செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர ஆணையாளர்
மாநகரசபை,யாழ்ப்பாணம். மாநகரசபை,யாழ்ப்பாணம்.

(4/3.13)

# மேற்கிந்தியத்தீவுகள் போராடித் தோல்வி; தென்னாபிரிக்கா முன்னிலை பெற்றது



(அன்டிகுவா)

ஹசிம் அம்லா, ஜக் கலிஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரின் இரண்டாவது போட்டியிலும் வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 இருபது-20, 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிய தென்னாபிரிக்க அணி தொடர்ந்து நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் வெற்றிபெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் அன்டிகுவாவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அம்லா, கலிஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 300 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹசிம் அம்லா 95 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 92 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் 89 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 85 ஓட்டங்களையும் ஏ.பி.டி. வில்லியர்ஸ் 35 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 41 ஓட்டங்களையும் அணித்தலைவர் சிமித் 37, மில்லர் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர், பொல்லார்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 301 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 48.1 ஓவர்களில் 283 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பிரவோ 70 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 74 ஓட்டங்களையும் சமி ஆட்டமிழக்காமல் 24 பந்துகளில் (2 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 58 ஓட்டங்களையும் ரிட்சட்ஸ் 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மேலர்னி மோர்கல் 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், ரிகோற் சோபி, போத்தா, கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு அடித்தளமைத்த அம்லா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

## கால்பந்து பயிற்சி போட்டிகளில் இங்கிலாந்து, ஆர்ஜென்டினா வெற்றி

(லண்டன்)

உலக கோப்பை கால்பந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் 11ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகிறது. இதில் பங்கேற்கும் அணிகள் பயிற்சி ஆட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இங்கிலாந்து-மெக்சிகோ அணிகள் பயிற்சி ஆட்டம் இங்கிலாந்தில் உள்ள வெம்ப்ளே மைதானத்தில் நடந்தது.

இதில் 9ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் கிங் கோல் அடித்தார். 35ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் குரோச் கோல் அடித்தார்.

இதன்மூலம் இங்கிலாந்து 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. 45 ஆவது நிமிடத்தில் மெக்சிகோ வீரர் பிரான்கோ கோல் அடித்தார் இதனால் 2-1 என்ற நிலை வந்தது.

ஆனால் 47ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் கிளன் ஜான்டர் ஒரு கோல் அடித்தார். இதன் மூலம் 3-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

இதேபோல் தென்னாபிரிக்கா, பல்கேரியா அணிகள் இடையே தென்னாபிரிக்காவில் சோவட்டோ நகரில் பயிற்சி ஆட்டம் நடந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன. ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

ஆர்ஜென்டீனா-கனடா அணிகள் இடையே ஆர்ஜென்டீனாவில் உள்ள போன்ஸ் ஏர்ஸ் நகரில் பயிற்சி ஆட்டம் நடந்தது. இதில் 5-0 என்ற கணக்கில் ஆர்ஜென்டீனா வெற்றிபெற்றது.

# முதலாவது கிண்ணம் உருகுவே வசமானது






உலகக் கோப்பை



உருகுவே அணி

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் (பிபா) 1904ஆம் ஆண்டு உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இருப்பினும் 1924ஆம் ஆண்டுதான் சர்வதேச மட்டத்தை சுற்றுப்போட்டிகளை பரிஸில் பிபா நடத்தியது.



இறுதிப்போட்டி நடைபெற்ற உருகுவே ஸ்ரேடியோ சென்ரெனரியோ மைதானம்

1928ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் கால் பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது. 1928ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி பிபா தேர்தல் நடத்தப்பட்டு புதிய அங்கத்தவர்களை நியமித்தது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிபாவின் புதிய நிர்வாகம் 1930ஆம் ஆண்டு யூலை மாதம் 13ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை முதலாவது உதை பந்தாட்டத் தொடரை உருகுவேயில் நடத்த தீர்மானித்தது.


ஆனாலும் போட்டிகளை நடத்துவதற்கான சாதக நிலை உருகுவேயில் காணப்படவில்லை. காரணம் ஐரோப்பிய நாடுகளின் ஆபத்தான பொருளாதாரம்.

முதலாவது உலகக்கிண்ணத் தொடரில் பங்கு பற்றுவதற்கு வாய்ப்புக்கிடைத்த நாடுகளுக்கு ஒரு நீண்ட கடல் பயணத்தை தாண்டியது போல் உற்சாகம்.

அதிகளவு நாடுகள் வாய்ப்புக்காக காத்திருந்த போதிலும் 13 நாடுகளுக்கே உலகக் கிண்ணத் தொடரில் பங்கு பற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. கோலாகலமாக நடைபெற்ற முதலாவது உலகக்கிண்ணத்தை போட்டியை நடத்திய உருகுவேயே கைப்பற்றியது.

இத் தொடரின் முதலாவது போட்டியில் மெக்ஸிக்கோவை எதிர்கொண்ட பிரான்ஸ் 4-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

ஆனால் பிரான்ஸை வீழ்த்திய ஆர்ஜன்டீனா இறுதிப் போட்டிவரை முன்னேறியது.



போட்டியின் முதல் பாதியில் பயன்படுத்தப்பட்ட பந்து



போட்டியின் இரண்டாவது பாதியில் பயன்படுத்தப்பட்ட பந்து

இறுதிப் போட்டியில் உருகுவேயுடன் ஆர்ஜென்டீனா மோதியது.

போட்டியின் முதல் பாதியில் ஆர்ஜென்டீனா 2-1 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தது. எனினும் போட்டியின் பின்பாதியில் போராடிய உருகுவே 4-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று முதலாவது உலகக்கிண்ணத்தை சுவீகரித்தது.

1930ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதி உருகுவே வீரர்களுக்கும் ரசிகர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்திய நாளாகிவிட்டது.

உலகக்கிண்ணத்தை நடத்துவதற்கு முயற்சி செய்த சிறந்த சிந்தனையாளரும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அப்போதைய (1930) தலைவருமான ஜீவ் றிமேற்றிடமிருந்து 30 சென்ரிமீற்றர் உயரமுள்ளதும் 4 கிலோக்கிறாம் தங்க நிறை உடையதுமான விக்டோரி அக்ஸ் ஓல்ஸ் டியோ என்ற கிண்ணத்தை உருகுவே அணித்தலைவர் ஜோஸ் நஸசி பெற்றுக்கொண்டார்.

கிண்ணத்தை வெற்றிகொண்ட மறுநாள் யூலை 31ஆம் திகதி உருகுவேயில் முழுநாள் விடுமுறை வழங்கப்பட்டது.

ஆர்.யூ.பாலமுருகன்



# போர்க் குற்ற விசாரணைக் குழு ஒன்றுள்ளபோது மற்றொன்று எதற்கு

## ஐ.நா. செயலாளரிடம் ஹோகன்ன கேள்வி



(கொழும்பு)

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட போர்க் குற்ற விசாரணைக் குழு இருக்கும் போது பன்னாட்டு அமைப்பொன்று விசாரணை நடத்துவது பொருத்தமற்ற செயல் என ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித ஹோகன்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பி.பி.சி. தமிழோசைக்குத் தெரிவித்ததாவது,

எம்மால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் விசாரணை செய்ய முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தன்மை உள்ள ஒரு ஆணைக்குழு.

இந்த நிலையில் ஐ.நா. சபை நிபுணர் குழுவை நியமிப்பது என்பது பொருத்தமற்ற விடயம். இவ்வாறு ஒரு குழுவை நியமிக்க முயல்வது குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தச் செய்யும்.

ஏனெனில் யுத்தத்தில் தோற்று விட்டுப் பொதுமக்களின் ஆதரவினால் வெல்லலாம் என்று கனவு காணும் புலிகளின் எஞ்சிய பிரிவினருக்குச் சாதகமாக அமைந்து விடும்.

இதனைப் புலிகளுக்குக் கிடைத்த வெற்றியாகக் கொண்டாடுபவர்களும் உள்ளனர் என்றார்.

**நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள்**

நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஒரு குழுவை நியமித்ததாக உலகில் எங்கும் வரலாறு இல்லை என்று சுட்டிக்காட்டிய பாலித ஹோகன்ன எங்களுடைய அணுகுமுறை என்பது குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்காக அல்ல.

அது பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஆசிய நாடுகளின் மேற்கொள்ளப்படும் வழிமுறையும் அல்ல. அத்துடன் அது இலங்கையின் வழிமுறையும் அல்ல.

ஐ.நா. சபையின் இவ் அணுகுமுறையானது வேறொரு கலாசாரத்தில் இருந்து வருகின்றது. எம்மால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு யுத்தம் தொடர்பான விடயங்களை ஆராயும்.

அப்போது மனித உரிமைகள், விழுமியங்கள், மனித உரிமைச் சட்டம் எங்கெல்லாம் மீறப்பட்டது என்பது குறித்து ஆராயும். அத்துடன் இதற்குப் பொறுப்பானவர்கள் குறித்துக் கண்டறிந்து அவர்கள் தொடர்பில் பரிந்துரை செய்யும்.

அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு இழப்பீட்டைப் பரிந்துரை செய்யும். எனவே ஒட்டுமொத்தத்தில் இது அனைத்து விடயங்களையும் உள்ளடக்கும் அணுகுமுறை.

தென்னாபிரிக்காவில் நியமிக்கப்பட்ட ஒரு நல்லிணக்க குழுவினை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

**தண்டனை கலாசாரத்தில் இல்லை**

குற்றம் செய்தவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிப்பது என்பது எமது கலாசாரத்தில் இல்லை. அத்துடன் போரில் ஈடுபட்ட ஒரு தரப்பு தற்போது இல்லை.

இந்த நிலையில் ஐ.நாவின் கருத்து என்பது அரசில் குற்றம் செய்தவர்களைத் தேடிக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுங்கள் என்பது தான்.

நாங்கள் ஒரு விசாரணைக் குழுவை நியமித்துள்ளோம். அது நம்பிக்கையுடன் செயற்படும் என்று எமக்கு நம்பிக்கையுண்டு. வெளிநாட்டு அமைப்புக்களை நம்பிக்கொண்டிருக்கும் காலம் எல்லாம் மலையேறிப் போய் விட்டது.

எங்களுடைய சொந்தப் பிரச்சினைகளை நாமே பார்த்துக் கொள்வோம் என்றும் கூறினார். (சு-9)

# மிகவும் சிறப்பாக நடைபெற்ற வற்றாப்பளைப் பொங்கல் திருவிழா

(கிளிநொச்சி)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா மிகவும் எழுச்சிகரமாக ஆலயத்தில் இடம்பெற்றது.

காலை முதல் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் ஆலயத்திற்குச் சென்று வந்த போதிலும் மாலையில் சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஆலய சுற்றாடலில் காணப்பட்டனர்.

கடந்த வருடங்களில் வன்னியில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக ஆலயத்தில் பொங்கல் விழா நடைபெறாது இருந்தது.

இந் நிலையில் இம்முறை ஆலய சுற்றாடலில் மக்கள் குடியேறி விட்டதன் அடிப்படையில் ஆலயப் பொங்கல் விழா மிகவும் களைகட்டிக்காணப்பட்டது.

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் உட்பட வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் வாழ்பவர்கள் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் என நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த மக்கள் பொங்கிப் படைத்ததுடன் காவடிகள், தூக்குக்காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை மிகவும் பயபக்தியுடன் நிறைவேற்றினார்கள்.

ஆலய வாசலில் தொடர்ந்து ஆயிரக் கணக்கான பானைகளில் மக்கள் அம்மனுக்குப் பொங்கினர். ஆலய சுற்றாடலில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டனர்.

கடந்த பல வருட கால இடைவெளியின் பின்னர் மாங்குளம், முல்லைத்தீவுப் பாதை நேற்று முன்தினம் நள்ளிரவு நேரத்திலும் கூட பொதுமக்களின் வாகனங்கள் பெரும் எண்ணிக்கையாக பயணம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். (சு-5)

## சமாதான...

இலங்கையின் பல்வேறுபட்ட இன சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் முனைப்புகளில் குமரன் பத்மநாதன் ஈடுபட்டுள்ளார்.

குமரன் பத்மநாதன் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை எனவும் நாட்டின் நன்மைக்காகப் பாடுபடும் ஒரு நபரை ஏன் சித்திரவதை செய்ய வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (சு-5)

## உழவு...

நசியுண்டு சம்பவ இடத்திலேயே பலியானார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரம் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (சு-7)

## நிபுணர் குழு அமைப்பதில்...

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலான பொறுப்பேற்றல் குறித்துத் தமக்கு ஆலோசனை கூற நிபுணர் குழுவை அமைக்கத் தான் முயன்று வருவதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களில் பொறுப்பேற்றல் குறித்து இலங்கை அரசு ஏற்கனவே அளித்த உறுதி மொழிகள் எந்தளவுக்கு அமுல் செய்யப்பட்டுள்ளன என்பது குறித்து சர்வதேச அளவில் உள்ள அனுபவங்கள் மற்றும் ஏற்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் தனக்கு அறிவுரை கூறக் கூடிய நிபுணர் குழு அமைப்பது குறித்து முயற்சி எடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் தனக்கு ஆலோசனை கூற ஒரு நிபுணர் குழுவை அமைக்கப் போவதாக ஐ.நா. பொதுச் செயலர் கூறி 80 நாள்கள் ஆன நிலையில் இது தொடர்பில் முன்னேற்றம் ஏதும் இல்லாமல் போனதற்கு இலங்கை அரசின் அழுத்தம் காரணமா? என்று செய்தியாளர்கள் கேட்டதற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, இலங்கையின் யுத்தக் குற்றம் தொடர்பாக ஆராயவென நிபுணர் குழுவொன்றை அமைக்கும் முயற்சியில் நான் இன்னமும் ஈடுபட்டுள்ளேன்.

இலங்கை அரசு தனது ஆணைக்குழு குறித்து அறிவித்த விடயங்கள் அனைவருக்கும் தெரியும். இலங்கைக் குழுவின் பணி குறித்தும் எனது நிபுணர் குழு அறிவிக்கும் என்றார்.

இதேவேளை சர்வதேச நெருக்கடிக் குழுவின் முயற்சிகளை நாங்கள் பாராட்டுகின்றோம். அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து நாங்கள் உற்று நோக்கியுள்ளோம் என்றார்.(சு-5)

# 1.5 பில். டொலரை கடனாக வழங்க ஈரான் அரசாங்கம் முன்வருகை

(கொழும்பு)

இலங்கைக்குத் தேவையான எரிபொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் அதனை சுத்திகரிப்பதற்கும் வசதியாக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க ஈரான் முன்வந்துள்ளதாகப் பெற்றோலியத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, முதலில் 30 விகித உடன்பாடுகளை மேற்கொள்ளும் புரிந்துணர்வுகளே ஏற்பட்டிருந்தன.

ஆனால் தற்போது ஈரான் முற்றுமுழுதாக உதவுவதற்கு முன்வந்துள்ளது. இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் அளவை ஒரு இலட்சம் பெரல்களாக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் இந்த சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்தைச் சீனாவின் நிர்மாண மற்றும் பொறியியல் நிறுவனம் முன்வந்துள்ளது.

இலங்கைக்குத் தேவையான எரிபொருள்களில் 60 விகிதமானவை ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

ரஷ்யாவிடமிருந்தும் எரிபொருள்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-5)

# இரட்டை வேடம் தரித்த ஆயுத விற்பனை முகவர்

இலங்கை இராணுவத்திற்குத் தொடர்பாடல் உபகரணங்களை விற்பனை செய்த ஆயுத விற்பனை முகவர் ஒருவர் அதே வகையான பொருள்களை விடுதலைப்புலிகளுக்கும் விற்பனை செய்துள்ளார். இந்த உபகரணங்கள் முல்லைத்தீவுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு உபகரணங்களில் இராணவத்தினருக்கு விற்பனை செய்த சமிக்ஞைகளை தடைசெய்யக்கூடிய உபகரணமும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளதாகப் பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சு-5)


JAFFNA COLLEGE
VADDUKODDAI

✸ DR.W.R.HOLMS MEMORIAL BASKET BALL TOURNAMENT-2010

UNDER 19 BOYS' AND GIRLS'
26th To 28th OF MAY 2010
DATE: 26th OF MAY 2010
TIME: 2.00 PM
VENUE: JAFFNA COLLEGE.



✸ MARY ELIAS MEMORIAL NET-BALL TOURNAMENT-2010

UNDER 13 GIRLS'
27th To 28th OF MAY 2010
DATE: 27th OF MAY 2010
TIME: 9.30 AM
VENUE: JAFFNA COLLEGE.



YOU ALL ARE CORDIALLY INVITED FOR THE ABOVE TOURNAMENTS.

2010.05.25 (சி-314) PRINCIPAL


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.